Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MARCH 10, 2022

வியாழக்கிழமை மார்ச் 10, 2022 | ஒளி: 07 கதிர் 252 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## 367 பொருட்களின் பட்டியல் வெளியானது




367 அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியை கட்டுப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.


அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்கு நேற்று (09) நள்ளிரவு முதல் தடை விதித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

தனியார் காணியில்

# புத்தர் சிலை வைக்க முயன்றதால் பதற்றம்







■ நூருல் ஹுதா உமர், எம்.எஸ்.எம். ஹனீபா, அஸ்ஹர் இப்றாஹிம்

அம்பாறை, அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட பாலமுனை முள்ளிமலை பிரதேசத்திலுள்ள தனியார் காணியை, புராதன சின்னங்கள் உள்ள காணியென அடையாளப்படுத்தி, புத்தர் சிலையொன்றை நிறுவ பௌத்த பிக்குகளும், சிங்கள இளைஞர்கள் சிலரும் எடுத்த முயற்சியால் அந்த பிரதேசத்தில் நேற்று (09) பதற்றம் நிலவியது.

தொடர்ச்சி P2

மின், எரிபொருளை சேமிக்குமாறு

## படிக்கட்டு, மின்விசிறியை பயன்படுத்த அறிவுறுத்து



நாட்டில் நிலவும் டொலர் நெருக்கடியால் எரிபொருள் இறக்குமதியில் ஏற்பட்டுள்ள பாதிப்பையடுத்து, அனைத்து அரச நிறுவனங்களிலும் மின்சாரம் மற்றும் எரிபொருள் சேமிப்பு தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கையை பொதுச் சேவைகள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

எரிபொருளுக்கான

## வரிசை குறையும் விலை உயராது

### மின்வெட்டு காலமும் குறையும் என்கிறார் அமைச்சர் காமினி



வெள்ளி அல்லது சனிக்கிழமையின் பின்னர் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வெளியே வரிசைகள் காணப்படாது என்று உறுதியளித்த எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகே, உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்த

தொடர்ச்சி P2



## மருந்து விலைகள் திருத்தப்படும்

டொலரின் விற்பனை விலை அதிகரிப்புக்கு ஏற்ப மருந்துப் பொருட்களின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன, இந்தியாவுடன் இணைந்து கடன் வசதியின் கீழ் மருந்துகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




**மாண்டுவண்டியில் பயணித்த பிரதேச சபை உறுப்பினர்...**

தனது வாகனத்துக்கு எரிபொருள் பெற்றுக்கொள்ள, கொள்கலன்களை மாட்டு வண்டியில் ஏற்றிக்கொண்டு கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ஜீவராஜா, எரிபொருள் நிரம்பும் நிலையத்துக்கும், பிரதேச சபைக்கும் சென்றிருந்தார். மேலதிக விபரங்கள், படங்கள் (பக்கம் 4) (சுப்ரமணியம் பாஸ்கரன்)

## மகளிர் தினத்தன்று மாணவி படுகொலை


### சந்தேகநபரும் கைது; காதல் நிராகரிப்பே காரணம்

■ எம். செல்வராஜா, பாலித ஆரியவன்ஸ, ராமு தனராஜா




பதுளை  ஹாலி எல, உடுவரை மேற்பிரிவைச் சேர்ந்த பாடசாலை மாணவியொருவர், சர்வதேச மகளிர் தினமான நேற்று முன்தினம் (08) கோடரியால் தாக்கப்பட்டு மிக கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## தனது படத்தை பார்க்க ரஞ்சனுக்கு முடியாது

சிறைதண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க இரட்டை வேடத்தில் நடித்த திரைப்பட நிகழ்வு சவோய் திரையரங்கில் மார்ச் 24ஆம் திகதி நடைபெறவுள்ளதால், அதில் கலந்துகொள்ள ரஞ்சன் ராமநாயக்கவை அனுமதிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை உயர்நீதிமன்றம் நேற்று (09) நிராகரித்தது.

தொடர்ச்சி P2




முழுச் செய்தி P3

## லிட்ரோ, லாஃப்க்கு நோட்டீஸ்

பாதுகாப்பற்ற எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்கும் எரிவாயு நிறுவனங்களின் தீர்மானத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு தொடர்பில், லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் எரிவாயு நிறுவனங்கள், நுகர்வோர்

தொடர்ச்சி P2

## பேரறிவாளனுக்கு பிணை



முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு கடந்த 30 ஆண்டுகளாக சிறை தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளனுக்கு இந்திய உச்ச நீதிமன்றம், நேற்று (09) பிணை வழங்கியது.

தன்னை பிணையில் விடுதலை செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் பேறறிவாளன் தாக்கல் செய்திருந்த மனு, நேற்றையதினம் (09) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2



## ராஜபக்ஷர்களின் கோரிக்கையை நிராகரித்தார் ரணில்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது, தேசிய அரசாங்கமொன்று செல்வதற்கு ரணில் விக்கிரமசிங்க விரும்பவில்லையென, அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொடர்ச்சி P2

அடுத்த மூன்று வாரங்களில்

## மருந்துகளின் நெருக்கடியால் பாரிய பிரச்சினை உண்டாகும்

### மருந்து விநியோகத்தை நிறுத்த ஆலோசனை



நோயாளர்களுக்குத் தேவையான மருந்துகள் குறித்து, எதிர்வரும் மூன்று வாரங்களில் நாட்டில் பாரிய பிரச்சினை உண்டாகும் என்று தெரிவித்த சுகாதார நிபுணர்கள் மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர் தலைவர் ரவி குமுதேஷ், மருந்து தட்டுப்பாட்டைத் தாண்டி, பாரிய மருந்து

தொடர்ச்சி P2

## மண்டியிட்டு தானம்பெறும் ஜனாதிபதி நானல்ல

### நேட்டோவில் சேர்வதில்லை என உக்ரேன் உறுதி



நேட்டோ அமைப்பில் தங்களைச் சேர்க்குமாறு உக்ரேனால் பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்ட போதும், நேட்டோ அதனை விரும்பவில்லை என்பதை இப்போதுதான் புரிந்து கொண்டோம் என்று தெரிவித்துள்ள உக்ரேன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி, மண்டியிட்டு எதையாவது தானமாக பெறும் நாட்டின் ஜனாதிபதியாக இருக்க நான் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## உக்ரேனில் தொடர்ந்தும் இருக்க 27 இலங்கையர்கள் விருப்பம்

தற்போது உக்ரேனில் தங்கியுள்ள 27 இலங்கையர்கள் தற்போதைக்கு அங்கு தொடர்ந்தும் இருப்பதற்கு விரும்பியுள்ளதாகத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், உக்ரேன், ரஷ்யா மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு உதவுவதற்காக அரசாங்கம் தூதரகங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி வருவதாக குறிப்பிட்டார். கொழும்பில் நேற்று (09) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# புத்தர் சிலை வைக்க முயன்றதால் பதற்றம்

கடந்த சில நாட்களாக அங்கு வருகைதந்த சிங்கள இளைஞர்கள் சிலர், சிலை நிறுவும் ஏற்பாடுகளைச் செய்து வந்ததாகவும் காணியில் பூஜை செய்வதற்கான ஏற்பாடுகளை நேற்று செய்தபோதே, இந்த முரண்பாட்டு நிலை தோன்றியுள்ளதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

ஸ்தலத்துக்கு வருகைதந்த முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எல்.தவம், அட்டாளைசேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.அன்ஸில், அட்டாளைசேனை பிரதேச சபை தவிசாளர் ஏ. அமானுல்லா, அட்டாளைசேனை பிரதேச சபை உறுப்பினர்கள், கிழக்கின் கேடயம் அமைப்பினர், பிரதேச மக்கள் என பலரும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

அதனையடுத்து, அக்கரைப்பற்று பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினரின் தலையீடுகளுடன், அரசாங்க அதிபரூடாக பிரச்சினையை தீர்க்க முடிவு செய்யப்பட்டதுடன், அங்கிருந்து எல்லோரும் வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பு படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

புத்தர் சிலை அமைப்பது தொடர்பாக பிரதேச சபையில் எவ்வித அனுமதியும் பெறவில்லையென தவிசாளர் ஏ.எல். அமானுல்லா தெரிவித்தார்.

## மருந்து விலைகள்...

கொழும்பில் நேற்று (09 ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளாதாகவும் எவ்வாறாயினும், மருந்து கையிருப்பு எவ்வளவு காலத்துக்கு போதுமானது என்ற விடயங்கள் ஆராயப்படுவதாகவும் குறிப்பிட்டார். தட்டுப்பாடு ஏற்படாத வகையில் மருந்துகளை வழங்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் நாட்டின் தேவைக்கு ஏற்ப மருந்துகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் வைக்கப்பட்டுள்ளதால், தேவையற்ற அச்சம் வேண்டாம் என்று பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

பரசிட்டமோல் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் விலை கணிசமாக அதிகரித்துள்ளதால், பரசிட்டமோல் மீதான கட்டுப்பாட்டு விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

## லிட்ரோ, லா:.ப்க்கு...

விவகார அதிகாரசபை மற்றும் இலங்கை தர நிர்ணய நிறுவனம் ஆகியவற்றுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (09) நோட்டீஸ் பிறப்பிக்குமாறு கட்டளையிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ருவான் பெர்னாண்டோ மற்றும் நீதியரசர் சம்பத் விஜேரத்ன ஆகியோரடங்கிய அமர்வு இந்த மனுவை எதிர்வரும் ஜூன் மாதம் 6ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு தீர்மானித்தது.

பாதுகாப்பற்ற எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகித்த அதிகாரிகளுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடக் கோரி, நாகாநந்த கொடித்துவக்கு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசம்பர் 17 ஆம் திகதி, இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்ட குறிப்பிட்ட தரநிலைகள் இல்லாமல் வீட்டு உபயோகத்துக்காக எரிவாயு சிலிண்டர்களை விநியோகிப்பதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நீட்டித்தது.

இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்ட எரிவாயு கலவையை காட்சிப்படுத்தாமல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க வேண்டாம் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் இரண்டு எரிவாயு நிறுவனங்களுக்கும் உத்தரவிட்டது.

## மகளிர் தினத்தன்று...

நேற்று முன்தினம் காலை வழமைபோல் பெற்றோரின் கால்களில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு, ஹாலிஎலயிலுள்ள பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பும் வழியிலேயே குறித்த மாணவி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், இக்கொலையுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் உடுவர தோட்டத்தைச் சேர்ந்த 32 வயதான சந்தேகநபர், தலைமறைவாகியிருந்த நிலையில், நேற்று (09) அதிகாலை ஹாலிஎல பொலிஸில் சரணடைந்த பின்னர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர், குறித்த மாணவியை காதலிப்பதாக தொந்தரவு செய்து வந்த நிலையில், மாணவி அந்த காதலை நிராகரித்துள்ளார்.

அத்துடன், மாணவியின் பெற்றோரும் இதற்கு விருப்பம் தெரிவிக்க மறுத்த போது, சந்தேகநபரால் ஒரு வருடத்துக்கு முன்னால் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதனால் ஏற்பட்ட பகையே இந்த சம்பவத்து காரணம் என தெரிவித்துள்ள பொலிஸார், சந்தேகநபரை பதுளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## மருந்துகளின் நெருக்கடியால்...

நெருக்கடியாக மாறும் என்றும் எச்சரித்துள்ளார்.

கடன் கடிதங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள் அதிகரிப்பு உள்ளிட்ட தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை என்று மருந்து இறக்குமதியாளர்கள் தெரிவிப்பதாகவும் இதுகுறித்து, அரசாங்கம் உடனடியாக அவதானம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்க டொலரொன்றின் பெறுமதியை 230 ரூபாயாகப் பேணுவதற்கு மத்திய வங்கி எடுத்துள்ள தீர்மானத்தையடுத்து, முன்னிலை மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் ஆகியோர், மருந்துகள் விநியோகத்தை நிறுத்துவதற்கு நேற்று முன்தினம் (08) ஆலோசித்து வருகின்றனர்.

தங்களது கையிருப்புகளிலிருந்து மருந்தகங்களுக்கு மருந்துகளை விநியோகிப்பதை பிரதான மருந்து நிறுவனங்களும் இறக்குமதியாளர்களும் ஏற்கெனவே நிறுத்தியுள்ளதாக அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சண்டிக கன்கந்த தெரிவித்தார்.

மருந்து வகைகளையும் உள்ளீட்டு சேர்மானங்களையும் கடனுக்கு இறக்குமதி செய்துள்ளதாலும் டொலருக்கான ரூபாய் பெறுமதியை பேணுவதால் விநியோகஸ்தர்களால் இலாபம் ஈட்டமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். எனவே, குறைந்த விலையில் அவற்றை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யும் போது உற்பத்தியாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் பாரிய நட்டத்தை சந்திக்க நேரிடும் என்று சுட்டிக்காட்டினார்.

நாட்டில் தற்போது நிலவும் டொலர் நெருக்கடியால், உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களால் தேவையான மருந்துகளை உற்பத்தி செய்யவோ, இறக்குமதி செய்யவோ முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவித்தார்.

பெரும்பாலான மருந்துகள் கட்டுப்பாட்டு விலையில் விற்கப்படுவதாகவும் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளும் கட்டுப்பாட்டு விலையில் விற்க நேரிட்டால் அவற்றை உள்ளூரில் விற்பனை செய்ய முடியாது என்றார்.

## மண்டியிட்டு தானம்பெறும் ஜனாதிபதி நானல்ல

நேட்டோ அமைப்பில் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டின் மீது ரஷ்யா கடந்த 24 ஆம் திகதியில் இருந்து தாக்குதல் நடத்தி வருகிறது. அதேபோல் உக்ரேனும் தம்மை தற்காத்துக் கொள்ள ரஷ்ய படைகள் மீது பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதனால் அங்கு அதிக அளவில் உயிரிழப்புக்களும், பொருட்சேதங்களும் ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலே, உக்ரேன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி அதிரடி அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த அறிவிப்பில் நேட்டோ நாடுகள் அமைப்பில் சேரவேண்டும் என்று உக்ரேன் விரும்பியது. ஆனால் நேட்டோ, அதனை விரும்பவில்லை என்பதை இப்போதுதான் புரிந்து கொண்டோம்.

எனவே நேட்டோ அமைப்பில் எங்களை உறுப்பினராக சேர்த்து கொள்ளுங்கள் என்ற எங்களின் கோரிக்கைக்கு இனியும் அழுத்தம் கொடுக்க போவதில்லை. இனி நேட்டோ நாடுகள் அமைப்பில் சேரவிரும்ப வில்லை.

மண்டியிட்டு எதையாவது தானமாக பெறும் நாட்டின் ஜனாதிபதியாக இருக்க நான் விரும்பவில்லை. ரஷ்ய ஜனாதிபதி புடின் , உக்ரேனில் உள்ள 2 பிரிவினைவாத குழுக்களுக்கு தன்னாட்சி அந்தஸ்து வழங்கி உள்ளார்.

## 367 பொருட்களின் பட்டியல் வெளியானது

திராட்சைப் பழம், அப்பிள் உட்பட பழவகைகள், சொக்கலேட் உட்பட பால் உற்பத்திகள், நூடுல்ஸ் வகைகள், பழச்சாறுகள், தண்ணீர், பியர், வைன் வகைகள், சிகரெட்டுகள் மற்றும் சுருட்டு வகைகள் உட்பட புகையிலை உற்பத்திப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள், டயர்கள், செருப்பு மற்றும் சப்பாத்துகள், இலத்திரனியல் உபகரணங்கள், வாகனங்கள், விளையாட்டுப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிக்கே தடை விதிக்கப்படவுள்ளது.

அத்தியாவசியமற்ற பொருட்களின் பட்டியலை திங்கட்கிழமை (06) அமைச்சரவைக் கூட்டத்தின் போது சமர்ப்பிக்கவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்திருந்தது.

இதற்கான அமைச்சரவையின் பரிந்துரை கிடைத்தவுடன் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல குறிப்பிட்டிருந்தார்.

தற்போதைய அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு தீர்வாக 600 அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியை தற்காலிகமாக நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## வரிசை குறையும்...

போதிலும் எரிபொருட்களின் விலைகளை அதிகரிப்பதற்கான எந்த எண்ணமும் இல்லை என்று தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (09) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையில் எரிபொருள் கையிருப்புகளை இறக்கும் எண்ணெய் கப்பலுக்கான கொடுப்பனவு 32 மில்லியன் அமெரிக்க டொலர்களாக முன்னர் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், சிங்கப்பூர் நாணய விகிதங்களுடன் ஒப்பிடுகையில் இது 52 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்பட்டுள்ள போதிலும், மக்களின் கோரிக்கைக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று தெரிவித்தார்.

அடுத்த வாரம் திங்கட்கிழமை அல்லது செவ்வாய்கிழமைக்குள் மின்வெட்டு காலம் குறையும் என்றும் நாட்டில் இயல்பு நிலை திரும்பும் என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

டீசலுக்கான வரிசைகள் காணப்படுவதை ஒப்புக் கொள்வதாகத் தெரிவித்த அமைச்சர், மின் நிலையங்களின் செயற்பாடுகளை தொடர்வதற்கு தேவையான டீசல் மற்றும் உலை எண்ணெய் இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டார். மார்ச் 5ஆம் திகதி முதல் மின்வெட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயற்சித்ததாகவும் எனினும் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் குறுகிய கால மின்வெட்டு அமுல்படுத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் குறைந்த கொள்ளளவிலேயே இயங்கிவருவதாகத் தெரிவித்த அமைச்சர், 100 சதவீதம் செயற்பாடுகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## தனது படத்தை பார்க்க...

மேலும், அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுடன் தொடர்புடைய இரண்டாவது மனுவை எதிர்வரும் 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான எஸ்.துரைராஜா மற்றும் யசந்த கோதாகொட ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில், நேற்றைய தினம் மனு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழகுக்கு ஏதுவாய் அமைந்த கருத்து தொடர்பில், நீதிமன்றில் நிபந்தனையற்ற தமது கவலையைத் தெரிவிக்க தமது கட்சிக்காரர் எதிர்பார்ப்பதாக, ரஞ்சன் ராமநாயக்க சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அநுர மெத்தேகொட மன்றுக்கு தெரியப்படுத்தினார்.

குறித்த கருத்தின் மூலம், நீதிமன்றத்தை அவமரியாதைக்கு உட்படுத்தும் எண்ணம் தமது கட்சிக்காரருக்கு இருக்கவில்லை எனவும், அது தொடர்பில் சமர்ப்பணம் முன்வைக்க தினம் ஒன்றை வழங்குமாறும் ஜனாதிபதி சட்டத்தரணி மன்றில் கோரிநின்றார்.

இது குறித்து எதிர்வரும் 25ஆம் திகதி சமர்ப்பணம் முன்வைக்குமாறு நீதியரசர்கள் குழாம் அறிவித்தது மேலும், தனது கட்சிக்காரருக்கு இந்த திரையரங்கில் இடம்பெறும் நிகழ்வில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதால், அவரை இந்த நிகழ்வில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு, ஜனாதிபதி சட்டத்தரணி அநுர மெத்தேகொட கோரினார்.

திரையரங்குக்கு அனுமதிக்க விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்த பிரதம நீதியரசர், பிரதிவாதிக்கு இந்த வழக்குக்காக சிறைத் தண்டனை விதிக்கப்பட வில்லை என்றும் சிறைச்சாலைகள் சட்டத்துக்கு அமைய பிரதிவாதி செயற்படவேண்டும் என்று பிரதம நீதியரசர் அறிவித்தார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக குற்றவாளியாக இனங்காணப்பட்ட ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 2021ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் திகதியன்றுநான்கு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து, உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

## படிக்கட்டு, மின்விசிறியை...

சுற்றறிக்கையின்படி, அலுவலகம் ஆரம்பித்து ஒரு மணி நேரத்துக்குப் பின்னர், வளிபதனாக்கியை (ஏ.சி) இயக்க வேண்டும் எனவும் காலை நேரத்தில் வெளிப்புற வெப்பநிலை குறைவாக இருப்பதால், ஜன்னல்களை திறந்து காற்றோட்டத்தைப் பெறுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பிற்பகல் 2.30 மணி முதல்மாலை 4.30 மணி வரையான காலப்பகுதியில் வளிபதனாக்கிகளை அணைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மின்தூக்கிகளின் பயன்பாட்டைக் குறைத்து முடிந்தவரை படிக்கட்டுகளைப் பயன்படுத்துமாறும் சுற்றறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளடன், அலுவலகங்களில் மின் உற்பத்திக்கு சூரிய சக்தியைப் பயன்படுத்துவதில் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு நிறுவனங்களும் குளிரூட்டிகளுக்குப் பதிலாக முடிந்தவரை மின் விசிறிகளைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகின்றன என்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஒவ்வொரு அரச வாகனத்திலிருந்தும் நாளாந்தம் குறைந்தபட்சம் ஒரு லீற்றர் எரிபொருளைச் சேமிப்பதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

75,000க்கும் அதிகமான அரச வாகனங்கள் இயங்கும் நிலையில் காணப்படுவதால் ஒவ்வொரு வாகனத்திலிருந்தும் ஒரு நாளைக்கு ஒரு லீற்றர் எரிபொருளைச் சேமிக்க முடிந்தால், மொத்தம் 75,000 லீற்றர் எரிபொருளை நாளொன்றுக்கு சேமிக்க முடியும் என சுற்றிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பேரறிவாளனுக்கு பிணை

அதன்போது, கடந்த 30 ஆண்டு காலமாக பேரறிவாளன் சிறையில் இருந்து வருகிறார். இதுவரை மூன்று முறை பரோலில் வெளியே வந்துள்ள அவர், சிறை நடத்தை விதிமுறைகளை முறையாகக் கடைபிடித்துள்ளார் என பேரறிவாளன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, மன்றின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

அவர்மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை என்பதால் அவருக்கு பிணை வழங்க வேண்டும் என கோரிநின்றார்.

அரச தரப்பில் பேரறிவாளனுக்கு ஏற்கெனவே ஏராளமான சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவருக்கு பிணை வழங்க கடுமையாக எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதியரசர்கள், பேரறிவாளனுக்கு பிணை வழங்கி உத்தரவிட்டனர்.

## உக்ரேனில் தொடர்ந்தும் இருக்க...

மோதல் வெடித்த போது, 15 மாணவர்கள் உட்பட 81 இலங்கையர்கள் உக்ரைனில் இருந்ததாகவும் 15 மாணவர்களும் 39 பேரும் உக்ரைனை விட்டு வெளியேறிவிட்டனர் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கையர்கள் அண்டை நாடுகளான போலந்து, ருமேனியா, மோல்டோவா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளதாகவும் தற்போது உக்ரேனில் தங்கியுள்ள 27 இலங்கையர்கள், தற்போது நாட்டை விட்டு வெளியேற விரும்பவில்லை என இலங்கை அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அங்காராவில் உள்ள இலங்கைத் தூதரகம் தற்போது உக்ரைனில் உள்ளவர்களுடன் தொடர்பைப் பேணி வருவதாகவும் 1,561 இலங்கையர்கள் உட்பட பெரும்பான்மையான மாணவர்கள், தற்போது பெலாரஸில் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பெலாரஸை விட்டு வெளியேற விரும்பும் எந்தவொரு இலங்கையர்களுக்கும் அதிகாரிகள் ஆதரவு வழங்குவதாகவும் பெலாரஸில் உள்ளவர்களுக்கு விசா வழங்குவது உள்ளிட்ட விவகாரங்களை மொஸ்கோவில் உள்ள இலங்கை தூதரகம் கையாண்டு வருவதாக தெரிவித்தார்.

## ராஜபக்‌ஷர்களின் கோரிக்கையை நிராகரித்தார் ரணில்

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையில் இருந்து மீண்டெழுவதற்கு, தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது என்றும். அதில் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் எம்.பிக்கள் ஐவரை, நீக்கிவிட்டு அந்த வெற்றிடத்துக்கு ஐ.தே.க உறுப்பினர்களை நியமிக்கவும் நிதியமைச்சர் பசில் ராஜபக்‌ஷ, இணக்கம் தெரிவித்திருந்தார் எனவும் அத்துடன் அந்த தேசிய அரசாங்கத்தில் நிதியமைச்சராக பசில் ராஜபக்‌ஷவே செயற்படுவார் என்றும் தகவல்கள் கசிந்திருந்தன. எனினும், தேசிய அரசாங்கம் ஒன்றுக்குச் செல்லவேண்டிய தேவையில்லை என்றும் சர்வக்கட்சி மாநாட்டை கூட்டுமாறும் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார் என அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலம் மீதான விவாதம், நேற்று (09) நடைபெற்றது.



**தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலம் திருத்தங்களுடன் நிறைவேறியது.**

பா. நிரோஸ்
ddnirosh@gmail.com



## “சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையை வழங்குக”

இலங்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள அறிக்கையை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (09) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், இலங்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள அறிக்கையை வழங்குவதாக வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தது. எனவே இந்த அறிக்கையை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சபைப்படுத்தி, அதற்காகன ஆவணங்களையும் எமக்கு வழங்க வேண்டும் என்றார்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான அறிக்கையில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை மத்திய கடிதம் எழுதியுள்ளது. இக்கடிதங்களையும் எமக்கு வழங்குவார்களாக இருந்தால் இது தொடர்பில் கலந்துரையாட முடியும். பாராளுமன்ற விவாதத்தை நடத்த முடியும். அதுபோல சர்வக்கட்சி மாநாட்டைக் கூட்டி கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

இந்த வாரத்திலாவது இந்த அறிக்கைய எமக்கு வழங்குவார்களா? எனவும் அவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதி தலைமையில் சர்வக்கட்சி கூட்டமொன்று விரைவில் கூட்டுவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கும் அமைச்சர் தினேஸ் குணவர்தன, இக்கூட்டத்துக்கு முன்னர் சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள அறிக்கையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## “15 ஊடகவியலாளர்களை அரசாங்கமே கொன்றது”



**துன்பமான சம்பவங்கள், சில இயற்கையான நிகழ்வுகளே, இதனை யதார்த்தமாகப் புரிந்துகொள்ளும் பக்குவத்தினை, நாம் தான் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்**

15 ஊடகவியலாளர்களைக் கொன்ற அரசாங்கமே தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்தைக் கொண்டுவந்துள்ளதாக கடுமையாக சாடிய எதிர்க்கட்சியின் பிரதமக் கொறடா பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, நாட்டிலுள்ள அனைத்து ஊடகங்களும் இச்சட்டமூலத்தை எதிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (09) அமர்வில் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்துக்கு எதிர்க்கட்சியின் எதிர்ப்பை பதிவு செய்து தொடர்ந்து உரையாற்றிய அவர், பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுவை புறக்கணித்துவிட்டு தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டுவந்துள்ளது என்றார்.

ஊடக நிறுவனங்கள் அனைத்தும் இச்சட்டமூலத்துக்கு எதிர்ப்பை தெரிவித்துள்ளதோடு, இச்சட்டமூலம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஊடக நிறுவனங்களுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை என குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன என்றார்.

“2015ஆம் ஆண்டுக்கு முன்னர் 15 ஊடகவியலாளர்கள் கொலை செய்த அரசாங்கத்துக்கு இதுபோன்ற சட்டமூலத்தைக் கொண்டுவர இடமளிக்க முடியாது” என்றார்.

## என்ன நடக்கும்?



தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்தின் ஊடாக சுயாதீனமற்ற நிறுவனம் ஒன்றுக்கு அதிகாரங்கள் வழங்கப்படுவதால் என்ன நடக்கும் என்கிற அச்சம் காணப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்தால் ஊடகவியலாளர்களின் உரிமைகள் பறிக்கப்படாதென அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூறுகிறார். ஆனால் இச்சட்டமூலத்துக்கு இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகிறது என்றார்.

கடந்த காலங்களில் ஊடக நிறுவனங்கள் மீது, ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவ்வாறான நிலையில் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்தால் சுயாதீனம் இல்லாத நிறுவனம் ஒன்றிடத்தில் அதிகளவான அதிகாரங்கள் வழங்கப்படும்போது என்ன நடக்கும் என்கிற அச்சம் காணப்படுகிறது என்றார்.

சுயாதீனமற்ற நீதிமன்றத்தால் ஊடகவியலாளர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்கிற அச்சம் ஊடகவியலாளர்களிடத்தில் காணப்படுகிறது என்றார்.

இதேவேளை, இளம் ஊடகவியலாளர் சங்கத்தின் பதிவு தொடர்பில் இதன்போது கேள்வி எழுப்பிய அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இச்சட்டமூலம் தொடர்பில் ஊடகவியலாளர்களுடன் நாம் கலந்துரையாடியிருந்தோம்.

## “தள்ளுகிறது அரசாங்கம்”



பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை, ஜெனீவா நோக்கி எவ்வாறு அரசாங்கம் தள்ளியதோ அதுபோல ஊடகங்களும் ஜெனீவாவுக்கு செல்லும் நிலையை அரசாங்கம் உருவாக்குமென தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகிர் மாக்கார், தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்தை நாட்டிலுள்ள அனைத்து ஊடகங்களும் எதிர்ப்பதாகவும் கூறினார்.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் நேற்று (09) கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் தொடர்பில் எவருக்கும் எந்தவிதமானப் பிரச்சினைகளும் இல்லை. ஆனால், தற்போது அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்துக்கு நாட்டிலுள்ள அனைத்து ஊடகங்களும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன எனவும் தெரிவித்தார்.

இச்சட்டமூலத்தால் தகவலறியும் உரிமைச் சட்டத்துக்கும் பாதிப்பு ஏற்படுமென அஞ்சப்படுகிறது. ஊடக அமைப்புக்ககள் அனைத்தும் இதற்கு எதிர்ப்பை தெரிவித்துள்ளன. எனவே, இச்சட்டமூலத்தை காலந்தாழ்த்தி இது தொடர்பில் அனைத்து ஊடக அமைப்புக்களுடனும் கலந்துரையாட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

உள்நாட்டு விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே முதலில் சென்றிருந்தார். தற்போது நாட்டிலுள்ள அனைவரும் மனித உரிமைகள் பேரவைக்கு செல்கிறார்கள். கார்டினலும் ஜெனீவாவுக்கு சென்றுள்ளார் என்றார்.

ஊடகங்களும் ஜெனீவாவுக்கு செல்லும் நிலையை அரசாங்கம் உருவாக்கியுள்ளது. இது நாட்டுக்கு நல்லதல்ல. இதனால் நாட்டின் எதிர்காலம் பாதிக்கும் என்றார்.

## “மலையக மக்களை இரண்டாந்தரமாக பாக்கிறது”



மலையக மக்களை இந்த அரசாங்கம் இரண்டாந்தர மக்களாகவேப் பார்க்கின்றது எனத் தெரிவித்த நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன், நுவரெலியாவில் உள்ள 7 இலட்ச மக்களுக்கு வெறும் 5 பிரதேச செயலகங்களே காணப்படுகின்றன என்றார்.


தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், எனவே, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்தின் ஊடாக தரவுகளைப் பாதுக்காக அதிகார சபை ஒன்றை அமைப்பது தொடர்பில் பேசப்படுகிறது. ஏனைய நாடுகளில் உள்ள தனித்துவமான அடையாள அட்டைகள் போல அனைத்துத் தரவுகளையும் உள்ளடக்கிய அடையாள அட்டையொன்றும் இதனூடாக வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது என்றார்.

இவ்வாறான நிலையிலேயே, மலையகத்தில் உள்ள பல தொழிலாளர்களுக்குப் பிறப்புச் சான்றிதழ்களையும், தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதிலும் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்கிறார்கள். குறிப்பாக ஊழியர் நம்பிக்கை நிதி, ஊழியர் சேமலாப நிதியை பெற்றுக்கொள்வதிலும் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

மாத்தளையில் சுமார் ஐந்து இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள் அங்கு 11 பிரதேச செயலகங்கள் உள்ளன. திருகோணமலையில் வெறும் 4 இலட்ச மக்களுக்கு 11 பிரதேச செயலகங்கள் உள்ளன. ஆனால் நுவரெலியா மாவட்டத்தில் 7 இலட்ச மக்கள் வாழ்கிறபோதிலும் வெறும் 5 பிரதேச செயலகங்களே காணப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

## “டக்ளஸுக்கு முடியாது”



மீனவர்களின் பிரச்சினையை தீர்த்து வைக்கும் நிலைமையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இல்லை என தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், இப்பிரச்சினை டக்ளஸால் மேலும் வலுவடைந்து செல்கிறது. எனவே, இந்த விவகாரத்தை கையாள்வதற்கான பொறுப்பை வேறொருவரிடம் கையளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலம் தேவையான ஒன்றாக இருந்தபோதிலும், அதனை அரசாங்கம் தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்றார்.

நாட்டு மக்கள் மிகப்பெரும் போராட்ட வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். நீண்ட வரிசையில் நின்றே அனைத்துப் பொருள்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிற சூழ்நிலை எழுந்துள்ளது. அரசாங்கத்தின் தவறானக் கொள்கையே இதற்குக் காரணம். இந்த தவறை சுட்டிக்காட்டும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களை பதவி நீக்கக்கூடிய அரசாங்கமாக இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

அமைச்சர்களுக்குக் கூட தங்களது கருத்துக்களை கூற முடியாத நிலையே நாட்டில் காணப்படுகிறது. அரச உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த விசேட எரிபொருள் கொடுப்பனவு இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றார்.

## “நீதிமன்றம் செல்ல முடியும்”



தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்தால் ஊடகவியலாளர்களின் உரிமைகள் பறிக்கப்படாதென தெரிவித்த விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தாம் எழுதும் விடயங்களுக்குப் பொறுப்புக்கு கூறுவதற்கு ஊடவியலாளர்கள் தயாராக இருந்தால், எந்த சட்டம் வந்தாலும் ஊடகவியலாளர்கள் அதற்கு அஞ்சத் தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்துக்கு அமைய ஊடகவியலாளர்களுக்கு எதிராக நீதிமன்றத்துக்கு செல்ல முடியும் எனவும் நாமல் மேலும் தெரிவித்தார்.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை நேற்று (09) ஆரம்பித்து வைத்து தொடர்ந்து உரையாற்றிய அவர், தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்துக்கு எதிராக இருவரே உயர்நீதிமன்றம் சென்றிருந்தனர். இச்சட்டமூலம் பாராளுமன்றத்தின் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கான 14 நாட்களுக்குப் பின்னரே இந்த இரு வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதனூடாக இச்சட்டமூலம் மீது எவருக்கும் அதிகளவில் ஈடுபாடில்லை என்பதே தெளிவாகிறது என்றார்.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்தின் ஊடாக நாட்டிலுள்ள அரச இயந்திரம், மக்களுக்கான சேவைகளை டிஜிட்டல் மயமாக்கவே எதிர்பார்க்கிறோம். கடந்தக் காலங்களில் சில நிறுவனங்களின் தரவுகள் காணாமல் போயுள்ளன. எனவே, தரவுகளைப் பாதுகாக்காது டிஜிட்டல் மயமாக்குவதில் எந்தவிதமானப் பிரயோசனங்களும் இல்லை என்றார்.

வங்கிகள், அரச நிறுவனங்களுக்கு மக்கள் வழங்கும் தரவுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.


## கொள்முதல் விளம்பரம்

ஸ்ரீயக்கல வணிக வளாகத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்காக தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விலைமனுகோரப்படுகின்றது.

விலைமனுகோரல் விண்ணப்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக குறிப்பிடப்பட்டு மீளளிக்கப்படாத பணத்தினை செலுத்தி 2022.03.10 ஆம் திகதி மு.ப 9.00 மணி முதல் 2022.03.23 ஆம் திகதி பி.ப 3.30 மணி வரை நகரசபை எஞ்சினியர் அலுவலகத்தில் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் மேலும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியல் அதற்கு தேவையான ஆவணங்களை சரி பார்த்துக் கொள்ளலாம்.

சரியான முறையில் நிரப்பப்பட்ட விலைமனுகோரல் விண்ணப்பங்களை நகரசபை ஆணையாளர் மெரிபிசோ மாவத்தை கம்பஹா என்ற முகவரிக்கு 2022.03.24 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபால் மூலமோ அல்லது நகரசபை ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள டெண்டர் பெட்டியில் இடவும்.

மு.ப 10.00 மணிக்கு விலைமனுகோரல் விண்ணப்பங்கள் திறக்கப்படும்

1. முதலாம் மாடி மற்றும் கேட்போர் கூடத்தை குளிரூட்டி அமைத்தல்
2. முதலாம் மாடியை பாட்டிசியன் அமைத்தல்
3. கேட்போர் கூடத்திலுள்ள மேடைக்கு துணித்திரை அமைத்தல்
4. கேட்போர் கூடத்திலுள்ள மேடைக்கு மின் விளக்கு அமைத்தல்
5. கேட்போர் கூடத்திற்கான கதிரைகள் விநியோகித்தல்.

**நகரசபை ஆணையாளர்**
**கம்பஹா மாநகர சபை**

பெண்கள் தினத்திலேயே பெண்களுக்கு

# பாதுகாப்பு இல்லாத நாடு

■ க.விஜயரெத்தினம்

பெண்கள் தினத்திலேயே பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத நாடாக இலங்கை உள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசு கட்சி ஊடகசெயலாளரும், அக்கட்சியின் பட்டிருப்பு தொகுதித் தலைவருமான பா.அரியநேத்திரன், நேற்று (09) தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினத்தன்று (மார்ச் 08) பதுளை, ஹாலி எல தமிழ் பாடசாலை மாணவி, உடுவரை பகுதியில் நடுவீதியில் வைத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு மேலும் கூறுகையில், "பெண்களுக்கு சுதந்திரம் இல்லை, சம உரிமை இல்லை, சமந்துவம் இல்லை, சுதந்திரம் என இலங்கையில் சர்வதேச மகளிர் தினத்தில் பல பெண்கள் அமைப்புகள் கருத்துகளை வெளியிட்டனர்.



"அதே தினத்தில் 18 வயதான மாணவி, பாடசாலையிலிருந்து அவரது வீட்டுக்கு செல்லும் வீதியில் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ள செயலானது இலங்கையில் எந்தவகையில் பெண்களுக்கு பாதுகாப்பு உள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

"நாடும்,தேசமும்,உலகமும் அவளே" என்ற தொனிப்பொருளில் இம்முறை சர்வதே பெண்கள் தினம் சர்வதேச ரீதியாக அனுஷ்டிக்கப்பட்டது. ஆனால், "பெயரளவில் மட்டும் நாடும் தேசமும் உலகமும் அவளே என்ற கோஷங்களை முன்வைத்தாலும் "நாடும், தேசமும், உலகமும், அவனே" என்ற கருத்தே இலங்கையில் உள்ளதை அனுபவரீதியாக உணரமுடிகிறது.

"உண்மையில் ஒரு பாடசாலை மாணவி சர்வதேச மகளீர் தினத்தில் படுகொலைசெய்யப்பட்ட சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதுடன், குற்றவாளி தண்டிக்கப்படுவதுடன் இவ்வாறான கொடூரங்கள் இனிமேலும் நடக்காமல் உறுதிப்படுத்த வேண்டும்" என்றார்.



எரிபொருள் பெற்றுக்கொள்ள கொள்கலன்களுடன்

# மாட்டுவண்டியில் பிரதேச சபை உறுப்பினர்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

எரிபொருள் பெற்றுக்கொள்ள கொள்கலன்களுடன் மாட்டுவண்டியில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ஜீவராஜா சென்றிருந்தார்.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

கரைச்சி பிரதேச சபை அமர்வு, நேற்று (09) இடம்பெற்ற நிலையில் தனது வாகனத்துக்கு எரிபொருள் இல்லாமையால் இவ்வாறு எரிபொருளை பெற்றுக்கொள்ள மாட்டுவண்டியில் பயணித்ததாக அவர் கூடியிருந்த மக்களிடம் தெரிவித்தார்.




நேற்றைய தினமும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அதிகளவான மக்கள் கூடியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இளம் சந்ததியினரை

## வாசகராக மாற்ற கண்காட்சி ஏற்பாடு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

இலங்கையின் வழக்கறிஞரான எம்.சி. சித்திலெப்பையினால் எழுதப்பட்ட சஞ்சிகைகள் மற்றும் அவர் பற்றி எழுதிய நூல்கள் தொடர்பான கண்காட்சி, தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக நூலகத்தில் நேற்று முன்தினம் (08) நடைபெற்றது.

இளம் சந்ததியினர் மத்தியில் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் பொருட்டு, தென்கிழக்குப் பல்கலைக்கழக நான்காம் வருடத்தில் மொழித்துறை பிரிவில் சிறப்புக் கலைமாணி கற்கை நெறியினை பயிலும் மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கண்காட்சி கூடத்தை, பல்கலைக்கழக உபவேந்தர்




பேராசிரியர் ஏ. றமீஸ் திறந்து வைத்தார்.

வளரும் இளம் சந்ததியினரை சிறந்த வாசகராக மாற்றவும், அவர்கள் மூலம் வாசிப்பை வளர்க்க வேண்டும் என்ற நோக்கிலேயே இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அத்துடன், வாசிப்பின் மகத்துவத்தை ஊக்கப்படுத்தும் வகையில், உலகின் தலைசிறந்த எழுத்தாளர்களையும், அவர்களின் படைப்புகளையும் எடுத்துரைக்கும் நோக்கில் இக் கண்காட்சி அமையப் பெற்றது.



## சிறுபிள்ளை வைத்திய நிபுணர் நியமனம்

■ நியாஸ் ஆதம்

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தியில் மற்றுமோர் மயிற்கல்லாக சிறுபிள்ளை விசேட வைத்திய நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் சிறுபிள்ளை விசேட வைத்திய நிபுணரான டொக்டர் எஸ்.கமலதீபன், வாரத்தில் மூன்று நாள்கள் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் பொருட்டு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் வழங்கி வைத்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின்

## 25ஆவது பொது பட்டமளிப்பு விழா

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 25ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா, எதிர்வரும் 12ஆம் மற்றும் 13ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தில் நேற்று (09) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் வைத்திய கலாநிதி வேல்முருகு விவேகானந்தராஜா தலைமையில், பல்கலைக்கழகத்தின் நல்லையா கேட்போர் மண்டபத்தில் இப்பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது.

"இம்முறை 1,958 உள்வாரி மற்றும் வெளிவாரி பட்டதாரி மாணவர்களுக்கும், பட்டப்பின்




தகைமை பெறுபவர்களுக்கும், கௌரவப் பட்டம் பெறுபவர்களும் தமக்கான பட்டத்தை பெறவுள்ளனர்.

"நிகழ்வின் பிரதம விருந்தினராக கல்வியமைச்சின் செயலாளர் சிரேஷ்ட பேராசிரியர் கே.கபில பெரேராவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தவிசாளர் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பீ.உடவத்தவும் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

"கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றில் முதல்முறையாக 1,958 மாணவர்களுக்கான பொதுப் பட்டமளிப்பு நிகழ்வு நடத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும்" என்றார்.

## இரு புதிய செயலாளர்கள்

### பதவி ஏற்புகள்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்



இரு புதிய அதிகாரிகளின் பதவியேற்பு வைபவங்கள், மட்டக்களப்பு மற்றும் ஏறாவூர் நகரங்களில் நேற்று (09) இடம்பெற்றன.

மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளராக எம்.ஆர் சியாஹுல்ஹக் பதவியேற்றுள்ளார். இவர் இதற்கு முன்னர் மட்டக்களப்பு மாநகர சபைச் செயலாளராகவும், ஏறாவூர் நகர சபையின் செயலாளாராகவும் கடமை புரிந்துள்ளார்.

அதேவேளை, ஏறாவூர் நகர சபைச் எம்.எச்.எம். ஹமீம் கடமையை பொறுப்பேற்றுள்ளார். இவர் இதற்கு முன்னர் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தராக மூன்று வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.

திடீர் வீதி சோதனை;

## 50 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

■ பாறுக் ஷிஹான்

கல்முனை பிராந்தியத்தில் நேற்று (09) காலை முதல் மதியம் வரை முன்னெடுக்கப்பட்ட திடீர் வீதி சோதனை நடவடிக்கையின் போது 50 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை, நற்பிட்டிமுனை



பிரதான, தாளவட்டுவான் சந்திகள் மற்றும் பாண்டிருப்பு போன்ற இடங்களில் இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துவது, தலைக்கவசம் அணியாது செல்வது, ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது, அதிவேகமாக செல்வது, குடிபோதையில் வாகனம் ஓட்டுவது ஆகியவற்றுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தந்தை சித்திரவதை:

## அச்சுவேலி பொலிஸில் சிறுமி சரண்



■ எஸ். நிதர்ஷன்

தந்தை தன்னைச் சித்திரவதை செய்கின்றனர் என சிறுமியொருவர், அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மதுபோதையில் வரும் தந்தை, தாயுடன் சண்டை பிடிப்பதாகவும் இருவராலும் தான் வீட்டில் நிம்மதியாக இருக்க முடியவில்லை எனத் தெரிவித்து, 12 வயது சிறுமி ஒருவர், பாடசாலைச் சீருடையுடன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம், ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த குறித்த சிறுமியின் தந்தை மதுபோதையில் வந்து தாயாருடன் தினம்தோறும் சண்டை பிடிப்பதாகவும் இதனால் தன்னுடன் ஒவ்வொருநாளும் வாக்குவாதத்திலும் சண்டையிலும் ஈடுபடுவதாகவும் தெரிவித்த சிறுமி, பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் தஞ்சம் அடைந்துள்ளார்.

7ஆம் தரத்தில் கல்வி கற்கும் 12 வயதுடைய குறித்த சிறுமி, நீண்ட நாள்களாக தந்தையின் சித்திரவதையைப் பொறுக்கமுடியாது இவ்வாறு தஞ்சம் அடைந்ததாக குறிப்பிட்டார்.

தஞ்சமடைந்த சிறுமியை, கோப்பாய் பிரதேச செயலக நன்னடத்தை பிரிவினரிடம் அச்சுவேலிப் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த சிறுமி வீட்டின் மூத்த பிள்ளை எனவும் இவரை விட இரண்டு பிள்ளைகள் இருப்பதாகவும் பொலிஸாரின் முறைப்பாட்டின்போது தெரிவித்துள்ளார்.

## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை பகுதியில் வைத்து மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த சு.சுதர்சன் என்ற 29 வயது இளைஞனே, நேற்று முன்தினம் (08) இவ்வாறு உயிரிழந்துள்ளார். சீமெந்து கல் அரியும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, மின்சார வயரில் இருந்து ஏற்பட்ட மின் ஒழுக்கால், கல் அரியும் இயந்திரத்துக்கு மின் பாய்ந்துள்ளது என்றும், அதன்போது, இயந்திரத்தை இயக்கிய இளைஞன் மின் தாக்கத்துக்கு இலக்கானார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

## உள்ளூர் துப்பாக்கி மீட்பு



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, பெரியகுளம் பகுதியில் உள்ளூர் துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நேற்று முன்தினம் இந்தப் பிரதேசத்தில் குறித்த துப்பாக்கி மீட்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சாரதியின் கழுத்தை வெட்டிய இளைஞன்

### மோட்டார் சைக்கிளில் தப்பியோட்டம்

■ செந்தூரன் பிரதீபன்

பருந்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் சாரதியை, அடையாளம் தெரியாத நபர்கள் வாளால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் பருத்தித்துறை 4ஆம் குறுக்கு வீதியை சேர்ந்த வேலு ஜஸ்டின் ராஜ் (45) நபர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை இருந்து யாழ்ப்பாணம் நோக்கி தனியார் பஸ் வந்து கொண்டிருந்தது. இதன்போது இரண்டு இளைஞர்கள், சிறுப்பிட்டி மற்றும் நீர்வேலிப் பகுதியில் ஏறியுள்ளனர்.

கோப்பாய் சந்தியை பஸ்



நெருங்கிக்கொண்டு இருந்த பொழுது, வாள் ஒன்றை எடுத்து இளைஞன் சாரதியின் கழுத்தில் வெட்டியுள்ளார்.

பின்னர் இருவரும் தப்பி சென்றுள்ளனர். இவர்கள் பிரிதொரு மோட்டார் சைக்கிளில் ஏறி தப்பிச் சென்றதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் அடையாளம் காணப்படவில்லை. விரிவான விசாரணைகளை கோப்பாய் குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கட்டுத்துவக்கில் சிக்கி

## காட்டுக்கு சென்றவர் பலி

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, நெட்டாங்கண்டல் பிரதேசத்துக்குட்பட்ட சிராட்டிகுளம் பகுதியில் நேற்று (09) அதிகாலை காட்டிடுக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர், கட்டுத்துவக்கில் சிக்கி, அது வெடித்ததில் உயிரிழந்துள்ளார்.

நெட்டாங்கண்டல், உழவனேரி பகுதியை சேர்ந்த 38 வயதுடைய தர்மலிங்கம் இளங்கோ என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கட்டுத்துவக்கு வெடித்ததில் படுகாயமடைந்த இவர் மீட்கப்பட்டு, மல்லாவி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம், மல்லாவி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பிரசோதனை மற்றும் பொலிஸ் அறிக்கையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# மைதானமாக மாறிய நீர்த்தேக்கம்

மலைவாஞ்ஞன்

வரட்சியான காலநிலையைத் தொடர்ந்து, மலையகத்திலுள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் என்றுமில்லாதவாறு குறைவடைந்துள்ளது. மஸ்கெலியா, மவுசாக்கலை நீர்த்தேக்கத்தில் நீருக்குள் மூழ்கிக்கிடந்த கட்டடங்கள் வெளியே தெரிகின்றன.

அந்த பிரதேசத்திலுள்ள சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் மவுசாக்கலை நீர்த்தேக்கத்தை விளையாட்டு மைதானமாக பயன்படுத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை மலையகத்தில் உள்ள நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் 63.5 சதவீதம் குறைவடைந்துள்ளதாகவும் தற்போது 36.5 சதவீத நீரே சேமிப்பில் உள்ளதாக மின்சார சபை பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதில், மவுசாகலை நீர்தேக்கத்தின் நீர்மட்டம் 62.5. சதவீதமும், காசல்ரீ நீர்தேக்கத்தின் நீர்மட்டம் 79.7 சதவீதமும் குறைவடைந்துள்ளது. கொத்மலை நீர்தேக்கத்தில் 28.1 சதவீத நீரே சேமிப்பில் உள்ளது.



# “டிஜிட்டல் தராசு வேண்டாம்”

## பண்டார எலிய தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டம்

எம். செல்வராஜா

ஹப்புத்தளை- பண்டார எலிய தோட்டத் தொழிலாளர்களால் நேற்று (9) பணிபகிஸ்கரிப்பும் ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

பறிக்கப்படும் கொழுந்தை நிலுவைச் செய்ய, தோட்ட நிர்வாகம் புதிதாக டிஜிட்டல் தராசைப் பயன்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த பணிபகிஸ்கரிப்பும் ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த தராசு 4 கிலோ கிராம் எடையை குறைத்து காட்டுவதாகவும் தொழிலாளர்கள் தெரிவிப்பதுடன், தொழிலாளர்களின் அடையாள அட்டைப்பதிவும் இத்தராசில் பதியப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

சுமார் 500 பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், “நவீன முறையிலான டிஜிட்டல் தராசு எமக்கு வேண்டாம்“. என்ற கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



மஸ்கெலியா ப்ரௌன்ஸ்வீக் தோட்டத்தில்

# 250 குடும்பங்கள் குடிநீர் இன்றி அவதி

மலைவாஞ்ஞன்

மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான ப்ரௌன்ஸ்வீக் தோட்டத்தில் உள்ள 250 குடும்பங்கள் குடிநீரின்றி பெரும் அவதிப்படுகின்றனர்.

அந்த தோட்ட மக்களுக்கு தேவையான குடிநீர் நீரோடையிலிருந்து தோட்ட நிர்வாகம் பெற்று, நீர் பம்பி ஊடாகவே விநியோகித்து வருகின்றது.

மலையகத்தில், தற்போது நிலவி வரும் வரட்சியான காலநிலையால், நீரூற்றுக்கள் வற்றிப்போய் உள்ளன. இதனால் பெரும்பாலானவர்கள் குடிநீருக்காக பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அத்துடன் மழையுடனான காலநிலை நிலவுகின்ற நாள்களிலும் குடிநீரை விநியோகிக்கும் தண்ணீர் பம்பி அடிக்கடி பழுதடைந்து விடுகின்றது. இதனால், கடந்த கடந்த 30 வருட காலமாக குடீநீர் பிரச்சினைக்கு முகம்கொடுத்து வருவதாகவும் அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த தண்ணீர் பம்பி பழுதடையும் போது தோட்ட நிர்வாகத்தினால் தண்ணீர் பவுசர் மூலம் குடிநீர் வழங்கப்படுகின்றது. எனினும், தமது தேவைக்கு அது போதுமானதாக இல்லை என்கின்றனர்.

எனவே, தமது குடிநீர் பிரச்சினைக்கு சிறந்த தீர்வை பெற்றுக்கொடுக்குமாறு, தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



மத்திய மாகாண அரச நிறுவனங்களில்

# மின்சார சிக்கனம்

## ஆளுநர் அறிவிப்பு: போட்டிகள் நடத்த ஏற்பாடு

மஹேஸ் கீர்த்திரத்ன

நாட்டில் எரிசக்தி தேவையை கருத்தில் கொண்டு மத்திய மாகாணத்திலுள்ள அரச நிறுவனங்களின் மின்சார பாவனையை குறைக்கும் திட்டமொன்றை சகல நிறுவனங்களிடமும் ஒப்படைக்கவுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித்.யூ.கமகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்து தெரிவித்த அவர்,

நீரேந்து பிரதேசங்களில் போதியளவு நீர்வீழ்ச்சி கிடைக்காமை காரணமாக, நீர்மீன் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே இந்தநிலையில் மத்திய மாகாணத்திலுள்ள சகல அரச நிறுவனங்களினதும் நீர், மின்சாரம், எரிபொருள் பாவனையை குறைத்துக்கொள்வது குறித்து



கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவித்தார்.

அரச நிறுவனங்களில் அத்தியாவசியமான தேவையை அடையாளம் கண்டு, மின்சாரம், எரிபொருள், நீர் என்பவை பயன்படுத்த வேண்டும் என தெரிவித்த அவர், மாதாந்தம் அவற்றை கண்காணிப்பதற்கான முறையொன்று உருவாக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் சூரியமின்சக்தி கட்டமைப்பை உருவாக்குவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றார். சூரியசக்தி தொடர்பில் தெளிவுப்படுத்துவதன் ஊடாக சூரிய சக்தியின் பயன்பாடு குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்தலாம் என்றார்.

இதற்காக மாணவர்கள் மற்றும் திறந்த பிரிவினரிடையே சித்திரப்போட்டி, சுவரொட்டி உள்ளிட்ட போட்டிகளை நடத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றார்.







# மாணவத் தலைவர்கள் தெரிவு...

நுவரெலியா சர்வதேச பாடசாலையில் மாணவ தலைவர்கள், தலைவிகள் தெரிவு செய்யும் நிகழ்வு, பாடசாலை மண்டபத்தில் நேற்று (9 ) புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது மாணவர்கள் சத்திய பிரமாணம் செய்துக்கொள்வதையும் மாணவர்களுக்கான பதக்கம் அணிவிப்பதையும் மாணவர்களுடன் பாடசாலை நிர்வாகத்தினரையும் படங்களில் காணலாம். பி.கேதீஸ்

# தெளிவு படுத்தும் நிகழ்வு

சிவாணிஸ்ரீ




சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுகாதாரம் குறித்து தெளிவுபடுத்தும் நிகழ்வு சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (8) நடைபெற்றது.

இதன்போது உலக வங்கி திட்டத்தின் இணைப்பாளர் விசேட வைத்திய நிபுணர் தீபிகா ஆட்டிகலவினால் ‘மக்கள் தமது வாழ்க்கையை சிறப்பாக அமைத்து கொள்வது’ தொடர்பான தெளிவுபடுத்தும் நிகழ்வும் இடம்பெற்றது.

இதில், பிரதம அதிதியாக கலந்துகொண்ட சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ விசேட வைத்திய நிபுணர் தீபிகா ஆட்டிகலவுக்கு ஞாபகார்த்த சின்னம் வழங்கி கௌரவித்தார்.

நீதி கிடைக்காவிழன்

# நகரை முடக்குவோம்

## கொதித்தெழுந்தார் கொட்டக்கலை புஸ்பா

நீலமேகம் பிரசாந்த்

தலவாக்கலை லோகி தோட்ட சந்தியில் அமைந்துள்ள வழிப்பிள்ளையார் கோவில், மரக்கிளை முறிந்து விழுந்து உயிரிழந்த ஆசிரியருக்கு நீதி கிடைக்காவிடின் கொட்டகலை நகரின் அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி, எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுப்போம் என்று கொட்டக்கலை வர்த்தக சங்க தலைவர் புஸ்பா விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.



இந்த விடயம் தொடர்பில், தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் கடையடைப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டதாகவும் இதற்கு தாம் பூரண ஒத்துழைப்பை வழங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவ, அந்த ஆசிரியரின் குடும்பத்தினருக்கு உரிய பதில் கிடைக்காவிடின் கொட்டகலை நகரையும் முடக்கி, எதிர்ப்பை தெரிவிப்போம் என்றார்.

கர்ப்பிணியின் தங்கச் சங்கிலியைப் பறித்த

# இருவர் கைது

மஹேஸ் கீர்த்திரத்ன

கர்ப்பிணியொருவரின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைப் பறித்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ், இருவர் நேற்று (9) கைதுசெய்யப்பட்டுள்ளனர் என மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த கர்ப்பிணி கட்டுதெனியவில் உள்ள கிளினிக்குச் சென்று திரும்பும் போது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், தங்கச் சங்கிலியைப் பறித்துச் சென்றுள்ளனர்.

அதனையடுத்து அப்பெண் மாத்தளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன், பொலிஸார் முன்னெடுத்த விசாணைகளுக்கு அமைய இருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் சந்தேக நபர்களின் மோட்டார் சைக்கிளைக் கைப்பற்றிய பொலிஸார், அவர்களிடமிருந்து 3,000 மில்லிகிராம் ஹெரோய்னையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்கள், இருவரும் மாத்தளை- வரகந்த மற்றும் ஹரஸ்கம பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என தெரிவித்துள்ள பொலிஸார், அவ்விருவரையும் மாத்தளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக தெரிவித்தனர்.



எரிவாயு தட்டுப்பாடு:

# சடலங்களை தகனம் செய்வதில் சிக்கல்

என்.ஆராச்சி

புளத்கொஹூபிட்டிய பிரதேச சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் தகனச்சாலைகளின் நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என புளத்கொஹூபிட்டிய பிரதேச சபையின் தவிசாளர் ருவன் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

சடலங்களை தகனம் செய்வதற்கான எரிவாயு தட்டுப்பாடே இதற்கு காரணம் என தெரிவித்துள்ள அவர், தகனம் செய்யும் நடவடிக்கைகள் நேற்று முன்தினத்துடன் (8) இடைநிறுத்தப்பட்டுள்ளன. எரிவாயு கிடைத்தவுடன் சடலங்களை தகனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

எனவே, புளத்கொஹூபிட்டிய பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள சடலங்களை ருவன்வெல்ல பிரதேச சபையின் அங்குருவெல்ல அல்லது கேகாலையிலுள்ள தகனச்சாலைக்கோ கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

எனவே, சடலங்களுக்குரிய உறவினர்கள் இதற்காக மேலதிக கட்டணங்களை செலுத்த நேரிடும் என்றார்.

# சிறு செய்திகள்...

நானுஓயா, உடரதல்லவில் உள்ள வீடொன்றில் நகை, பணம் நேற்று (8) அதிகாலையில் கொள்ளையிடப்பட்டுள்ளது.

வீட்டில் அனைவரும் துாங்கிக் கொண்டிருந்த போது மர்ம நபர்கள் ஜன்னலைத் உடைத்து வீட்டில் புகுந்து கைவரிசையை காண்பித்துள்ளன.

5 இலட்சத்து 67 ஆயிரம் பெறுமதியான நகை மற்றும் விவசாயத்தின் மூலம் அறுவடை செய்த சிறுத்தொகை பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளன என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்த நானுஓயா பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கலிகமுவ பிரதேச சபையில், நேற்றுமுன்தினம் (8) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியினரே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

வீதி விளக்குகளை அணைப்பதற்கு, புளத்கொஹூப்பிட்டிய பிரதேச சபை மறுப்புத் தெரிவித்துள்ளது. மக்களின் எதிர்ப்பை சந்திக்க வேண்டிவரும் என்றும், தேவையில்லாத பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதனால், விளக்குகளை அணைப்பதற்கு அச்சபை மறுப்புத் தெரிவித்துள்ளது.

எனினும், 27 கிராம சேகவர் பிரிவுகளில், வீடுகளுக்கு முன்பாக இருக்கும் வீதி விளக்குகளை இரவு 7 மணிமுதல், அதிகாலை 5 மணிவரையிலும் ஒளிரவிட்டு அணைத்துவிடுவதற்கும் நேற்று முன்தினம் (08) கூடிய சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றின் போது, முன்னெடுக்கப்பட்ட ஒன்லைன் வகுப்புகளுக்காக வாங்கிக்கொடுக்கப்பட்ட கையடக்க தொலைபேசிகளுக்கு தங்களுடைய பிள்ளைகள் அடிமையாக்கிவிட்டனர் என சுட்டிக்காட்டியுள்ள நாவுல்ல ஸ்ரீநாக தேசிய பாடசாலையின் பெற்றோர். அதிலிருந்து மாணவர்களை மீட்டெடுக்கும் செயற்பாடுகளை துரிதப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளனர். மகளிர் தினத்தன்று இடம்பெற்ற கூட்டத்தின் போதே மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

# பூர்வீக இடங்களை அடத்தாக அபகரிக்கும் 'புத்தர்'

ஒவ்வோர் இனங்களைச் சேர்ந்தவர்களும் ஏதாவதொரு மதங்களைப் பின்பற்றுதான் செய்வர். அந்தந்த மதப்போதனைகளை அச்சொட்டாக கடைப்பிடிக்க வேண்டுமென்பதில் பலரும் கவனமாக இருப்பர். எமது நாட்டைப் பொறுத்தவரையிலும் கோவில், தேவாலயம், பள்ளிவாசல் மற்றும் விஹாரைக்குச் செல்லாவிடின், அது தெய்வக் குற்றமாகிவிடும் என, பலரும் நம்புகின்றனர்.

மதங்கள், அவற்றின் மீதான நம்பிக்கையை விவாதிப்பது அவசியமற்றது. ஆனால், மதச்சின்னங்களை பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் அடத்தான செயற்பாடுகளை சகிக்க முடியாதுள்ளது. மலையகத்தை பொறுத்தவரையில் "குடிசன பரம்பலை சீர்குலைத்தல்" மிகவும் நாசுக்கான முறையில் இன்னும் முன்னெடுக்கப்படுகிறது. அங்கும் புத்தர் சிலையே பயன்படுத்தப்படுகின்றது.

வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில் அடாவடி தனங்களை மேற்கொண்டே, தமிழ், முஸ்லிம் மக்களின் பூர்வீக காணிகள் அபகரிக்கப்படுகின்றன. அப்போதெல்லாம், "புத்தர் சிலை" யை கருவியாகப் பயன்படுத்திக் கொண்டுவிடுகின்றனர்.

அடத்தாக வைக்கப்படும் புத்தர் சிலைகளுக்கு தீங்கிழைத்துவிட்டால், மதத்தை நிதித்ததாக, பிரசாரங்களை மேற்கொண்டு, இனங்களுக்கு இடையில் விரிசலை ஏற்படுத்துவதற்கு பலரும் முயற்சிக்கக்கூடும். ஆனால், சிறுபான்மை இனத்தினரின் பொறுமையால், எவ்விதமான அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை. அதனையிட்டு மகிழ்ச்சியடைய வேண்டும்.

வவுனியா தெற்கு பிரதேச செயலக வளாகத்தில் புத்தர் வந்தமர்ந்துள்ளார். அம்பாறை, அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு உட்பட்ட பாலமுனை முள்ளிமலை பிரதேசத்தில் உள்ள தனியார் காணியில் புராதன சின்னங்கள் உள்ள காணியென புத்தர் சிலையொன்றை வைப்பதற்கு பௌத்த தேரர்களும், பெரும்பான்மை இளைஞர்களும் நேற்று (09) முயற்சித்துள்ளனர். ஆக, நாடு எவ்வாறு பற்றியெறிந்தாலும் பரவாயில்லை. நாங்கள் செய்வதை செய்துகொண்டுதான் இருப்போமென பலரும் நினைக்கின்றனர்.

பேதங்களுமின்றி, அனைவரும் ஓரணியில் திரண்டு நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய நேரத்தில். புத்தர் சிலையை வைத்து, சிறுபான்மையின மக்களின் பூர்வீக காணிகளை அடத்தாக பிடிப்பதுதான், தற்போதிருக்கின்ற மிகப்பெரிய பிரச்சினையா?,

இன்றேல், குழப்பங்களை ஏற்படுத்தி, அதில் குளிர்காய்வதன் ஊடாக, தற்போதைய பிரச்சினையை மூடிமறைப்பதற்காக யாராவது திரைமறைவில் இருந்துகொண்டு செயற்படுகின்றனரா? என்பதும் சந்தேகமே.

சிறுபான்மையின மக்களின் பூர்வீக காணிகளை அடத்தாகவும் "புத்தர்" சிலையைக் கொண்டு வைத்துவிட்டு பிடிக்கும் செயற்பாடுகளை உடனடியாக கைவிடவேண்டும். தொல்பொருள் ஆராய்ச்சி எனும் பெயரில், ஒரு மதத்துக்கு உரிய சின்னங்களை மட்டுமே வைத்து பூஜைகளை நடத்திவிட்டு, அங்கு ஆராய்ச்சி செய்வதை கைவிடவேண்டும்.

நாடு முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் பிரச்சினைகளை முன்னுரிமை அடிப்படையில் தீர்ப்பதற்கு, பேதங்களை மறந்து ஓரணியில் திரளவேண்டும். இனங்களுக்கு இடையில், இன்றேல் மதங்களுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் தூபமிடக்கூடாது. கடந்து வந்த பாதையும் கடந்துகொண்டிருக்கும் பாதையும் கடினமானது என்பதை நினைவில் கொண்டு, பேதங்களை மறந்து, பிரச்சினைகளை இனங்கண்டு, ஓரணியில் திரண்டு, முன்னுரிமை அடிப்படையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே காலத்தின் தேவையாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்


ஒரே சொல் அதுவே மந்திரம்! எவருக்காவது வாக்குக்களைச் சொன்னால், அதிலிருந்து புரளக்கூடாது. சிலர் சொன்னால், அதிலிருந்து புரளக்கூடாது. சிலர் பேசுவது ஒன்று ஆனால், அந்த உறுதிமொழிகளைக் காற்றோடு பறக்கவிட்டுவிடுவார்கள். சொல்லும் வார்த்தையில் உண்மை துலங்க வேண்டும்.

நியாய தர்மங்களில் இருந்து நழுவாது ஒருவர் செயலுருவில் காட்டினால் அவர்களின் வாழ்வு என்றுமே வசந்தம். சில வாக்குறுதிகளை நினைத்தப்படி செய்ய முடியாமலும் விடலாம். சூழ்நிலைகளில் ஏற்படும் இடையூறுகள் மனித செயல்களை இடைநிறுத்திவிடலாம்.

ஆனால், முடிந்தவரை முயற்சிசெய்வது நல்லது. நடந்த தவறுகளை உள்ளதை உள்ளபடி, உதவி கேட்ட நபரிடம் சொல்லிவிட வேண்டும். எவரையும் காத்திருக்க வைக்கலாகாது. மன்னிப்புக் கேட்டுவிடுவதால், மனப்பாரமும் குறைந்துவிடும். இன்று வேலை பெற்றத்தருவேன் எனக்கூறி ஏமாற்றுபவர்களைப் பற்றி பலரும் அறிந்த விடயம். யோசிக்காமல் உறுதி வழங்கலாகாது. உங்களால் இயன்றவற்றை மட்டும் சொல்ல வேண்டும். பேச்சில் நாணயம் வேண்டும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# கோட்டா - பசிலோடு மோதும் மூவரணி



புருஜோத்தமன் தங்கமயில்

விமல் வீரவங்சவையும் உதய கம்மன்பிலவையும் அமைச்சுப் பதவிகளில் இருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ கடந்த வாரம் நீக்கியிருக்கின்றார். விமல், கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் அடங்கிய மூவர் அணியின் அமைச்சுப் பதவிகள் பறிக்கப்படும் என்று கடந்த ஆண்டு நடுப்பகுதியிலேயே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சுமார் ஐந்து ஆறு மாதங்கள் கடந்த நிலையிலேயே மூவர் அணியில் இருவரது பதவிகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. தன்னுடைய பதவி பறிக்கப்படவில்லை என்கிற போதிலும், விமல், கம்மன்பில ஆகியோரின் பதவி பறிப்புக்கு எதிர்ப்பு வெளியிட்டு கோட்டா தலைமையில் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டங்களில் பங்கெடுக்கப்போவதில்லை என்று வாசுதேவ அறிவித்திருக்கின்றார்.

கடந்த ஆண்டு நடுப்பகுதியில் அமைச்சரவையின் அனுமதியின்றி இரவோடு இரவாக கோட்டா, பசில் சகோதரர்கள் கெரவலப்பிட்டிய யுகதனவி மின்நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்காவுக்கு விற்றார்கள். குறித்த மின்நிலையத்தின் பங்குகளை விற்பனை செய்வது தொடர்பில் அமைச்சரவையில் ஆராயப்பட்ட போதும், ராஜபக்‌ஷ சகோதரர்கள் மின்நிலையத்தின் பங்குகளை விற்பனை செய்துள்ள அமெரிக்க நிறுவனம் தொடர்பில் எந்தவித அறிவிப்பும் விடுக்கப்பட்டிருக்கவில்லை. பசில் ராஜபக்‌ஷ தனிப்பட்ட ரீதியில் ஆதாயம் அடைவதற்காக அமைச்சரவையில் ஆராயப்பட்ட நிறுவனத்துக்கு மாறாக இன்னொரு நிறுவனத்துடன் பங்குகளை விற்பனை செய்யும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார் என்பதுதான் விமல், கம்மன்பில, வாசு மூவர் அணியின் குற்றச்சாட்டு. அவர்கள், குறித்த ஒப்பந்தத்தை கேள்விக்குள்ளாக்கும் வகையில் நீதிமன்றத்தையும் நாடியிருக்கிறார்கள்.

அமைச்சரவைக்குள் இருந்து கொண்டு அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிராக நீதிமன்றத்தை நாடியமை தொடர்பிலும் ஊடகங்களில் விமர்சனங்களை முன்வைத்தமை தொடர்பிலும் கோட்டா பசில் சகோதரர்களுக்கு மூவர் அணி மீது பயங்கர கோபம். ஏனெனில் யாருக்கும் தெரியாமல் கோட்டா பசில் சகோதரர்கள் தங்களின் அமெரிக்க விசுவாசத்தை காட்டுகிறார்கள் என்கிற தோரணையிலான விமர்சனங்கள் தென் இலங்கையில் எழுவதற்கு மூவரணியின் எதிர்ப்பு நடவடிக்கைகள் முக்கிய காரணமாக இருந்தன. அதுவும் எதிர்க்கட்சிகளைத் தாண்டி மிகுந்த குடைச்சலை மூவரணி கொடுப்பதாக கோட்டா பசில் சகோதரர்களுக்கு காய்ச்சல். அந்த நிலையை கையாளும் நோக்கிலேயே அத்தியாவசியப் பொருட்களில் விலை அதிகாரிப்பு தொடர்பில் ஊடகங்களில் பேசிய இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் பதவி பறிக்கப்பட்டது. சுசிலின் பதவி பறிப்பு மூவரணிக்கான எச்சரிக்கையாக செய்யப்பட்ட நடவடிக்கை. ஆனால், மூவரணி அந்த எச்சரிக்கையை பொருட்டாக மதிக்கவில்லை. மாறாக, இன்னும் இன்னும் அதிகமாக அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டே விமர்சிக்கத் தொடங்கினார்கள். அதற்கு முக்கிய காரணமொன்று அவர்களுக்கு இருந்தது.

அதாவது, தற்போது ராஜபக்‌ஷர்கள் ஆட்சியில் இருந்தாலும் மூவரணி விரும்பிய மஹிந்த ராஜபக்‌ஷவோ அல்லது அவரது மகனான நாமல் ராஜபக்‌ஷவோ அரசாங்கத்தின் தீர்மானங்களை எடுக்கும் நபர்களாக இல்லை. மாறாக கோட்டா பசில் சகோதரர்களே தீர்மானங்களை எடுக்கும் நபர்களாக இருக்கிறார்கள். மஹிந்தவின் பேச்சு, கோட்டா பசில் சகோதரர்களினால் கணக்கில் எடுக்கப்படுவதில்லை என்பதால், மஹிந்தவின் விசுவாசிகள் அரசாங்கத்துக்குள் ஓரங்கட்டப்பட்டார்கள். அதுதான், மூவரணியும் எதிர்கொண்ட மிகப்பெரிய சிக்கல். மூவரணி தங்களை அமெரிக்காவின் எதிரிகளாகவே தங்களின் அரசியல் வாழ்கை பூராவும் முன்னிறுத்தி வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், கோட்டா பசில் சகோதரர்களின் அமெரிக்க விசுவாசம், தங்களின் எதிர்கால அரசியலை கேள்விக்குள்ளாக்கும் என்பது அவர்களது பயம். அதனால், அமெரிக்காவுக்கு மின்நிலைய பங்குகள் விற்பனை செய்யப்பட்ட விடயத்தை முக்கிய விடயமாகவும் மாற்றினார்கள்.

மூவரணிக்குப் பின்னால் இலங்கையை கடன்பொறிக்குள் மாற்றும் நோக்கத்தோடு இயங்கும் சீனாவின் கரங்கள் இருப்பதாகவும் தென் இலங்கையில் நம்பப்படுகின்றது. ஏனெனில், தங்களின் கட்டுப்பாடுகளில் இருந்து கோட்டா பசில் சகோததர்கள் விலகி, இந்தியாவையும் அமெரிக்காவையும் நோக்கி சாய்வதாக சீனா கருதுகின்றது. அண்மைய நாட்களில் பசிலின் தொடர் இந்திய விஜயங்களும் அதனையே வெளிப்படுத்துகின்றன. இதனால், சீனா எரிச்சலடைந்திருக்கின்றது. அதனாலேயே, மூவரணியைக் கொண்டு மூர்க்கமான எதிர்ப்பை கோட்டா பசிலுக்கு எதிராக சீனா முன்னெடுப்பதாகவும் பார்க்கப்படுகின்றது. இலங்கையில் ராஜபக்‌ஷர்கள் ஆட்சியில் இருப்பதையே சீனா விரும்புகின்றது. ஆனால், அமெரிக்காவுக்கு கடப்பாடுகளைக் கொண்டிருக்கின்ற கோட்டா பசில் கட்டுப்பாட்டில் இலங்கையின் ஆட்சி இருப்பது தங்களுக்கு பாதிப்பானது என்பது சீனாவின் எண்ணம். அதனாலேயே, மஹிந்த ராஜபக்‌ஷவினை பலப்படுத்துவது தொடர்பில் சிந்திக்க வேண்டியேற்பட்டிருக்கின்றது. மூவரணியைப் பொறுத்தளவின் மஹிந்தவின் தீவிர விசுவாசிகள். விமல், கம்மன்பில ஆகியோரின் பதவிகள், மஹிந்தவின் வேண்டுகோள்கள் கோட்டாவினால் நிராகரிக்கப்பட்ட நிலையிலேயே பறிக்கப்பட்டிருக்கின்றன.

இன்னொரு பக்கத்தில் நாடு எதிர்கொண்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி என்பது பாரதூரமானது. ராஜபக்‌ஷர்களின் அரசியல் வரலாற்றில் என்றைக்கும் இல்லாதளவுக்கு தென் இலங்கை மக்களினால் வெறுக்கப்படுகிறார்கள். கடந்த தேர்தலில் ராஜபக்‌ஷர்களுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கு அண்மித்த வெற்றியை பரிசளித்த மக்கள், இன்றைக்கு தேர்தலொன்று நடைபெறுமாக இருந்தால், மாற்றி வாக்களிக்கக் கூடிய நிலையே காணப்படுகின்றது. அப்படியான நிலையில், அரசாங்கத்தின் மீதான கோபம் தங்களின் மீதான கோபமாகவும் மாறிவிடக்கூடாது என்பதில் மூவரணி கவனமாக இருந்தது.

பதவி பறிக்கப்பட்டதன் பின்னர், ஊடக சந்திப்பை நடத்திய மூவரணி வெளிப்படுத்திய கருத்துக்கள் அதனையே வெளிப்படுத்தின. அத்தோடு, ராஜபக்‌ஷர்கள் மீதான மக்களின் தற்போதைய கோபத்தை, கோட்டா பசில் சகோதரர்கள் மீதானதாக மாற்றும் வகையிலான கருத்துக்களையே வெளிப்படுத்தினார்கள். தங்களது அரசியல் எதிர்காலம் என்பது ராஜபக்‌ஷர்களில் நிழலிலேயே படர வேண்டியிருக்கின்றது என்கிற உண்மையை மூவரணி தெளிவாகவே உணர்ந்து கொண்டிருக்கின்றது. அவர்களினால் எந்தவொரு தருணத்திலும் சஜித் தலைமையிலான பிரதான எதிரணியோடோ அல்லது இன்னொரு தரப்புடனோ இணைய முடியாது. அப்படியான நிலையில், ராஜபக்‌ஷர்களின் தலையாய ராஜபக்‌ஷவான மஹிந்தவையும், நாமலையும் தங்கியிருக்க வேண்டியிருக்கின்றது.

மஹிந்தவைப் பொறுத்தளவிலும் கோட்டா பசில் சகோதரர்களின் பிடியில் இருந்து ஆட்சியை மீட்டு நாமலிடம் கையளிப்பதற்கு விமல், கம்மன்பில போன்ற இனவாத சக்திகளின் ஆதரவு அவசியமானது. ராஜபக்‌ஷர்களைச் சுற்றி தேசத்தின் காவலர்கள், மீட்பர்கள் என்கிற ஒளிவட்டத்தை வரைந்தவர்களில் விமலும் கம்மன்பிலவும் முக்கியமானவர்கள். ராஜபக்‌ஷர்களின் மீள் எழுச்சிக்காக மூவரணி தென் இலங்கை பூராவும் இனவாதத்தை நாளும் பொழுதும் வளர்த்தார்கள். அப்படியான நிலையில், இனவாதமே அரசியலை வெற்றி கொள்வதற்கான ஆயுதமாக நம்பியிருக்கின்ற மஹிந்தவினால், மூவரணியை விட்டுக்கொடுத்துவிட முடியாது.

விமல், கம்மன்பிலவின் பதவி பறிப்பு தென் இலங்கையில் தங்களுக்கு எதிராக பெரிய அதிர்வை உண்டு பண்ணும் என்பது கோட்டா பசில் சகோதரர்கள் அறியாதது இல்லை. ஆனால், மூவரணிக்கு ராஜபக்‌ஷர்களைத் தாண்டினால் போக்கிடம் ஏதுமில்லை என்பதும் நன்றாகவே தெரியும். அதுதான், பதவி பறிப்பை சாத்தியமாக்கியிருக்கின்றது. அத்தோடு, இனியும் அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டு ஆட்சிக்கு எதிரான விமர்சனங்களை முன்வைக்கத் துணிபவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் எண்ணப்பாட்டிலியே பதவி பறிப்பு காட்சி அரங்கேற்றப்பட்டிருக்கின்றது.

## கடிதங்கள்

### 12 ஆண்டுகளாக பேருந்து சேவைகள் இல்லை

முல்லைத்தீவு அம்பலவன்பொக்கணை கிராம அலுவலர் பிரிவுக்கு கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக பேருந்து சேவைகள் இடம் பெறாததன் காரணமாக போக்குவரத்து நெருக்கடியினை இக்கிராமத்தின் மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

450 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் பேருந்து சேவைகள் இடம் பெறாததன் காரணமாக முல்லைத்தீவு பொது வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலை என்பவற்றிற்குச் செல்வதற்கு கூட பேருந்து நெருக்கடி காணப்படுகின்றது. 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் முல்லைத்தீவு நகரத்தில் இருந்து மாத்தளன் வரை இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவைகள் இடம் பெற்றன. தற்போது அச்சேவைகள் இடம் பெறுவதில்லை.

இரட்டைவாய்க்கால் தொடக்கம் சாலை கிராமம் வரையான வீதிப் புனரமைக்கப்படாததன் காரணமாக பேருந்து சேவைகள் நடைபெறுவதில்லை. தேர்தல் காலங்களில் கிராமத்திற்குள் வருகின்ற பேருந்துகள் நாள்தோறும் வருவதில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் அக்கறை காட்டுவதில்லை. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலும் கரைதுறைபற்று பிரதேச செயலகத்திலும் பல தடவைகள் பேருந்து சேவைகள் நடத்துங்கள் என கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் பேருந்து சேவைகள் இடம் பெறவில்லையென மாத்தளன், அம்பலவன்பொக்கணை. வலைஞர்மடம் ஆகிய பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் தெரிவிக்கின்றனர்.

நடராசா கிருஷ்ணகுமார்



சென்னை

# போரை நிறுத்துங்கள் புட்டின்

## கவி வரிகளில் வைரமுத்து டுவிட்



உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 24 ஆம் திகதி முதல் தாக்குதல் நடத்தி வருவதால், அந்நாட்டின் மீது பல நாடுகள் அடுக்கடுக்கான பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்றன.

மேலும் ரஷ்யாவின் தாக்குதலுக்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்து வருவதோடு போரை நிறுத்துமாறு வலியுறுத்தியும் வருகின்றனர்.

இந்நிலையில் 'போரை நிறுத்துங்கள் புட்டின்' என்ற தலைப்பில் கவிஞர் வைரமுத்து டுவிட்டரில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த பதிவில் " மில்லி மீற்றராய் வளர்ந்த உலகம் மீட்டர் மீட்டராய்ச் சரியும், கரும்புகை வான் விழுங்கும், பகலை இருள் குடிக்கும், கடல்கள் தீப்பிடிக்கும், குண்டு விழாத நாடுகளிலும் ஏழைகளின் மண்பானை உடையும், ஆயுதம் மனிதனின் நாகரிகம், போர் அநாகரிகம்" போரை நிறுத்துங்கள் புட்டின் "எனக் கூறியுள்ளார்.



திருவண்ணாமலை

## மகளிர் தினத்தில் மாணவி உலக சாதனை

மகளிர் தினத்தில் பாடசாலை மாணவியொருவர் கண்களைக் கட்டி கொண்டு 2 நிமிடங்களில் 106 தேங்காய்களை உடைத்து உலக சாதனை படைத்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அருகே உள்ள மூனுகபட்டு கிராமத்தைச் சேர்ந்தவர் ஸ்ருதி.
13 வயதான இவர் அக்கிராமத்திலுள்ள அரச பாடசாலையில் 8ஆம் தரத்தில் கல்வி பயின்று வருகின்றார்.

இவருக்கு சிறுவயது முதலே உலக சாதனை படைக்கவேண்டும் என்ற ஆர்வம் இருந்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் கண்களைத் துணியால் கட்டி கொண்டு சுமார் 36 கிலோ மீற்றர் தூரம் சைக்கிள் இயக்கி அனைவரின் பாராட்டையும் பெற்று, கலாம் உலக சாதனை புத்தகத்திலும் இடம் பிடித்தார்.

## உக்ரேன் இராணுவத்தில் சேர 500 இந்தியர்கள் விண்ணப்பம்



உக்ரேன்- ரஷ்யா இடையே இடம்பெற்று வரும் போரானது கடந்த 14 நாட்களுக்கு மேலாக நீடித்து வரும் நிலையில், உக்ரேனில் இருந்து இந்தியர்களை மீட்கும் பணியில் இந்திய அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

இந்நிலையில் உக்ரேன் இராணுவத்தில் இணைய இந்தியர்கள் 500 பேர் விண்ணப்பித்துள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் ரஷ்யாவுக்கு எதிராக போரிட உக்ரேன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி (Volodymyr Zelenskyy) சர்வதேச படை அணியை உருவாக்க உத்தரவிட்டார். இதற்காக இணையதளம் ஒன்றும் உருவாக்கப்பட்டது.

அதில் உக்ரேன் இராணுவத்தில் தன்னார்வலராக சேர விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும், எந்த நாட்டினரும் சேரலாம் என்றும் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இது குறித்து உக்ரேனின் வெளியுறவு அமைச்சர் குலேபா கூறும் போது, "52 நாடுகளை சேர்ந்த 20 ஆயிரம் பேர் சர்வதேச படை அணியில் சேர்ந்துள்ளனர்" எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் உக்ரேன் இராணுவத்தில் இணைய முன்னாள் படை வீரர்கள் உட்பட 500 பேர் விண்ணப்பித்து உள்ளதாக தூதரக தரப்பில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளது.

எவ்வாறு இருப்பினும் உக்ரேன் அரசு நன்கு ஆராய்ந்த பின்னரே தன்னார்வலர்களின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பீகார்

### 7 நூற்றாண்டுகளாக

## மதுவிலக்கு கடைப்பிடிக்கும் கிராமம்

கிராமம் ஒன்று 7 நூற்றாண்டுகளாக, மதுவிலக்கை கடைப்பிடித்து வருவதாக வெளியாகியுள்ள செய்தியொன்று ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பீகார் மாநிலத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டில் இருந்து பூரண மதுவிலக்கு அமுலில் இருந்து வருகின்றது.

ஆனால், இதெற்கெல்லாம் முன்னோடியாக அம்மாநிலத்தில் உள்ள கங்காரா என்ற கிராமம் 7 நூற்றாண்டுகளாக மதுவிலக்கைக் கடைப்பிடித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீகார் மாநிலத்தில் பூரண மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்ட பின்னர், வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறு சமயங்களில் மது விற்பனை நடைபெற்றதாக வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

ஆனால், இக்கிராமத்தில் மது விற்பனை நடைபெற்றதாகவோ அல்லது யாரும் மது அருந்தியதாகவோ இதுவரையில் வழக்குப்பதிவு செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து கங்காரா கிராம மக்கள் கூறுகையில், "பல ஆண்டுகளாக நாங்கள் மத நம்பிக்கை அடிப்படையில் இந்த பழக்கத்தை கடைப்பிடித்து வருகிறோம். எங்கள் கிராமத்தில் மது அருந்துவது என்பது பாவ காரியம் ஆகும்.

ஹைதராபாத்

## 'நன்றி ' கூறினால் சிறப்புத் தள்ளுபடி




உணவகமொன்றில் 'நன்றி, ப்ளீஸ் , வாழ்த்துக்கள்' போன்ற வார்த்தைகளை பயன்படுத்துபவர்களுக்கு சிறப்பு தள்ளுபடி வழங்கப்பட்டுவரும் சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஹைதராபாத்தை சேர்ந்த 'தக்ஷின் 5 ' என்ற உணவகத்திலேயே இவ்வாறு சிறப்பு தள்ளுபடி வழங்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மேலும் இவ்வியாபார யுத்தி பலரையும் கவர்ந்துள்ள நிலையில் குறித்த உணவகத்திற்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பலரும் இவ் உணவகத்தின் புதிய வியாபார தந்திரத்தை பின்பற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து அவ் உணவகத்தின் உரிமையாளர் கருத்துத் தெரிவிக்கையில் "இன்றைய உலகில் மனிதர்களுக்கு இருக்க வேண்டிய சின்னச் சின்ன நற்பண்புகள் மிகவும் அரிதாக தென்படுகிறது. இதனை வெளிக்கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தில் தான் இந்த புதிய முயற்சியை நாங்கள் தொடங்கினோம்." என்றார்.

திருச்சி

## வைரலாகும் அகிலாக் குளியல்



திருச்சியிலுள்ள திருவானைக்காவல் ஜம்புநாதர் - அகிலாண்டேஸ்வரி கோயிலில் வளர்க்கப்பட்டு வரும் 'அகிலா' என்ற யானை சேற்றில் குளிக்கும் வீடியோவானது இணையத்தில் வைரலாகி வருகின்றது.

குறித்த யானை சேற்று மண்ணில் குளிப்பதற்காக, புதியதாக, 1,200 சதுர அடியில் பள்ளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அகிலா குளிப்பதைக் காணவே அக் கோயிலுக்கு மக்கள் படையெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# "பக்கச்சார்பினைத் தகர்க்கும்"




சர்வதேச மகளிர் தினத்தை முன்னட்டு, இலங்கைக்கான வெளிநாட்டு தூதரங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் ஒன்பது பேர், இலங்கையின் உயர்மட்ட பெண் அரசாங்க அதிகாரிகளுடன் "பக்கச்சார்பினைத் தகர்க்கும்" நோக்கத்துடன் ஒன்று கூடலில் கலந்துகொண்டனர்.

இந்தோனேசியாவின் தூதுவர் தேவி கஸ்டினா டொபிங்கினால் நடத்தப்பட்ட இந்நிகழ்வில், அமெரிக்கத் தூதுவர் ஜுலீ சங்க, நோர்வே தூதுவர் ட்ரைன் ஜொரன்லஜ எஸ்கெடல், நெதர்லாந்து தூதுவர் டான்யாக கொங்கிரிப், ஐக்கிய இராச்சியத்தின் உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன், இத்தாலி தூதுவர் ரீட்டா மனெல்லா, துருக்கி தூதுவர் டெமெட் செகெர்சிஓகுலூ, வியட்நாம் தூதுவர் ஹோ தி தான் ட்ருக் மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் சிம்ரின் சிங் ஆகியோருடன், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பெண் பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றனர்.



### இரத்ததான நிகழ்வு...

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், அமைச்சு மண்டபத்தில் இரத்ததான நிகழ்வு நடைபெற்றது. ( நிதர்ஷன் வினோத்)



### மாத்தளையில்...

சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி, நேற்று முன்தினம் (8) மாத்தளை மாவட்ட செயலகத்தில் பெண்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. முன்னாள் மாவட்ட அதிபர் ஹலென் மீகஸ்முல்ல தலைமையில் இதன் நிகழ்வுகள் இடம்பெற்றன. (மஹேஸ் கீர்த்திரத்ன)




### ஊக்குவிப்பு சந்தை...

சர்வதேச பெண்களை தினத்தன்று கிளிநொச்சி மக்களின் வங்கியின் பெண்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு சந்தையும், விற்பனை தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தலும் செயப்பாடு கிளிநொச்சி மக்கள்வ ங்கியின்மு ன்றலில் இடம்பெற்றது.
கைதொழில் அபிவிருத்தி சபையின் அனுசரணையில் மக்கள் கிளிநொச்சி கிளை சுயதொழில் உற்த்திகளில் ஈடுபடுகின்ற பெண்களுக்கான சந்தை வாய்ப்பினை ஊக்குவிக்கும் நோக்கில் உற்பத்தி பொருட்களுக்கு பார்கோட் தொழிநுட்பத்தை பெற்றுக்கொடுத்து அதன் மூலம் இலகுவாக விற்பனையை மேற்கொள்வதற்கும்பெ ண்களுக்கு வாய்ப்பளி க்கப்பட்டிருந்தன.
(மு.தமிழ்ச்செல்வன்)

### மகளிர் தினம்...



சர்வதேச மகளிர் தினத்தன்று (8) கிண்ணியா மக்கள் வங்கி கிளையின் முகாமையாளர் கே.எம்.அமீர்தீன் தலைமையில் நடைபெற்ற விழாவில், பிரதம அதிதியாக கிண்ணியா மகளிர் கல்லூரி பிரதி அதிபர் சட்டத்தரணி திருமதி எஸ்.நஸீரா நஜாத் கலந்து சிறப்பித்தார்.
இதன் போது பிரதேச பெண் தொழில் முயற்சியாளர்கள் பலர் கௌரவிக்கப்பட்டதுடன் பணப்பரிவர்த்தனை முறையொன்றும் வாடிக்கையாளர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.
(எப்.முபாரக்)

### திருகோணமலையில்...





திருகோணமலை வலய முன்பள்ளி ஆசிரியர்கள் இணைந்து திருகோணமலை நகரமன்ற கேட்போர், திருகோணமலை வலய முன்பள்ளி ஆசிரியர்கள் சங்கக் குழு தலைமையிலும் ஏ.நிரோஷா எம்.ஏ.சாஷியா ஆகியோர்களின் ஏற்பாட்டிலும் மகளிர் தின நிகழ்வுகள் நடைபெற்றன. (ஹஸ்பர்)




உலக வங்கி

உக்ரேன்

# அதிரடி அறிவிப்பு



உக்ரேன் ரஷ்யா இடையே இடம்பெற்று வரும் போரானது 14 நாட்களைக் கடந்து நீடித்து வருகின்றது.

இம் மோதலில் இரு நாடுகளிலும் அதிக அளவில் உயிர் இழப்புக்களும்,பொருள் சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

அத்துடன் உக்ரேனின் முக்கிய நகரங்களை ரஷ்ய படைகள் கைப்பற்றியுள்ளதால் அங்குள்ள லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

மேலும் போரை நிறுத்தும்படி அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில், உக்ரேனுக்கு உதவும் வகையில் உலக வங்கி அதிரடி அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிவிப்பில் உக்ரேனில் பொருளாதார அவசர நிலையை மீட்பதற்கான 723 மில்லியன் டொலர்கள் கடனுதவியாக வழங்க தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ரஷ்யா

## 850 உணவகங்களை மூடிய மெக்டொனால்ஸ்

உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பல்வேறு நாடுகள் ரஷ்யா மீது பொருளாதாரத் தடை உள்ளிட்ட பல தடைகளை விதித்து வருகின்றன.

மேலும் புகழ்பெற்ற தொழில்நுட்ப நிறுவனங்களா மைக்ரோசொப்ட், அப்பிள், ஐ.பி,எம் மற்றும் சர்வதேச பணப்பரிவர்த்தனை நிறுவனங்களான விசா மற்றும் மாஸ்டர் கார்ட், அத்துடன் நெட்பிளிக்ஸ், டிக்டொக்'உள்ளிட்ட பல நிறுவனங்கள் தமது சேவையை ரஷ்யாவில் நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளன.

அதேசமயம் கோகோ கோலா மற்றும் பெப்சி போன்ற குளிர்பான நிறுவனங்களும் தமது சேவையை ரஷ்யாவில் நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளன.

இந்நிலையில், ரஷ்யாவில் உள்ள தமது 850 உணவகங்களையும் மெக்டொனால்ஸ் நிறுவனம் தற்காலிகமாக மூடுவதாக அறிவித்துள்ளது. மெக்டொனால்ஸில் சுமார் 62,000 பேர் பணிபுரியும் நிலையில் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளமை ரஷ்ய மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



உக்ரேன்


2 ஆம் உலக போருக்கு பின்

## கிறிஸ்துவின் சிலை இடமாறியது

இரண்டாம் உலகப் போருக்கு பின் முதல் தடவையாக உக்ரைன் நாட்டில் உள்ள வீவ் நகரத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் சிலை வேறு இடத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

கடந்த 1939 ஆம் ஆண்டில் இருந்து 1945ஆம் வருடம் வரை இடம்பெற்ற இரண்டாம் உலகப் போரின் போது உக்ரேனின் ஆர்மீனியன் தேவாலயத்தில் இருந்த இயேசு சிலையை, குண்டு வீச்சு போன்ற தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பதற்காக வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில், கடந்த 24 ஆம் திகதியிலிருந்து உக்ரேன் மீது ரஷ்யா தொடர் தாக்குதல் நடத்தி வருவதால் குறித்த இயேசு சிலையானது மீண்டும் இடம் மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



உக்ரேன்

ரஷ்யாவின் தாக்குதலில்

## பிரபல நடிகர் வீரமரணம்
### சோகத்தில் திரையுலகம்

உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் கடந்த இரண்டு வாரங்களைக் கடந்து நீடித்து வருகின்றது.

குறிப்பாக உக்ரேன் தலைநகர் கீவ் (Kyiv) உள்ளிட்ட சில பகுதிகளில் ரஷ்யப் படைகள் வான்வழித் தாக்குதலுக்கான எச்சரிக்கை ஒலியை எழுப்பியுள்ளதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ரஷ்யாவுக்கு எதிரான தாக்குதலில் உக்ரேனின் இராணுவத்தில் இணைந்து போராடிய 33 வயதான நடிகர் பஷா லீ (Pasha Lee) கடந்த 6 ஆம் திகதி கீவ் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தாக்குதலில் உயிரிழந்துள்ளமை மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தொலைக்காட்சி தொகுப்பாளர், பாடகர், இசையமைப்பாளர் மற்றும் நடிகர் என பன்முகங்களைக் கொண்ட பாஷா லீ -ஐ தேசம் இழந்துள்ளதாக ரசிகர்களும், உக்ரேன் திரையுலகத்தைச் சேர்ந்தவர்களும் கவலை தெரிவித்து வருகின்றனர்.

உக்ரேன்

வருமானத்தை நன்கொடையாக வழங்கினார்

## ஆண்டி முர்ரே



உலகின் முன்னனி டென்னில் வீரர்களில் ஒருவரான ஆண்டி முர்ரே (Andy Murray ) வெளியிட்டுள்ள அறிவிப்பானது உலக நாடுகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.


நேட்டோ அமைப்பில் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டின் மீது ரஷ்யா தொடர்ந்து 14 ஆவது நாளாகத் தாக்குதல் நடத்தி வருகிறது. அதேபோல் உக்ரேனும் தம்மை தற்காத்துக் கொள்ள ரஷ்ய படைகள் மீது பதில் தாக்குதல் நடத்திவருகின்றது.

இம் மோதலில் இரு நாடுகளிலும் ஆயிரக்கணக்கான உயிர் இழப்புக்களும்,பொருள் சேதங்களும் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா சபை கவலை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பிரித்தானியாவைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற டென்னிஸ் வீரர் ஆண்டி முர்ரே " இவ் வருடம் முழுவதும் தான் கலந்துகொள்ளும் அனைத்து போட்டிகளிலும் கிடைக்கும் பரிசுத் தொகையை நன்கொடையாக வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டில் " உக்ரேனில் தீவிரமடைந்து வரும் தாக்குதலால் 7.5 மில்லியனுக்கும் மேற்பட்ட குழந்தைகள் அபாய கட்டத்தில் உள்ளனர். எனவே, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சிக்கு தேவைப்படும் கருவிகளை அளிக்க, யுனிசெப் உடன் சேர்ந்து பணிபுரிகிறேன்.

இதற்காக இந்த வருடத்தில் என் வருமானத்தை முழுமையாக நன்கொடையாக வழங்க முடிவு செய்துள்ளேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.



# சம்பியன்ஸ் லீக்: காலிறுதியில் லிவர்பூல்

சம்பியன்ஸ் லீக் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூல் தகுதி பெற்றுள்ளது.

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் இத்தொடரின் லிவர்பூலின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்று இறுதி 16 அணிகளுக்கிடையிலான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனிடம் லிவர்பூல் தோல்வியடைந்திருந்தது. மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை லொட்டரோ மார்ட்டின்ஸ் பெற்றிருந்தார்.

இந்நிலையில், இன்டர் மிலனின் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்று இறுதி 16 அணிகளுக்கிடையிலான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்றதன் மூலமே 2-1 என்ற மொத்த கோல் கணக்கில் காலிறுதிப் போட்டிக்கு லிவர்பூல் தகுதிபெற்றது.



## இலங்கை சதுரங்க சம்மேளன பி பிரிவில் ஆக்கில் கான்

அஸ்லம் எஸ். மௌலானா, அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை சதுரங்க சம்மேளனம் தேசிய ரீதியில் நடாத்திய சதுரங்கத் தொடரில், Pro Knights Chess Academy சார்பாக பங்குபற்றிய கல்முனை சாஹிரா கல்லூரி மாணவன் ஐ.கே. முஹம்மட் ஆக்கில் கான் அடுத்த சுற்றான பி பிரிவில் விளையாடத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பொலநறுவை றோயல் கல்லூரியில் கடந்த ஒரு வார காலமாக இடம்பெற்ற இப்போட்டி ஏழு சுற்றுக்களைக் கொண்டதாக அமைந்திருந்தது.

வயது வரையறைகள் இன்றி ஆண்களுக்குத் தனியாக நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரில் சுமார் 40 போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர். இதில் பல சர்வதேச தரப்படுத்தல் போட்டியாளர்களுடனும் விளையாடியே இவர் அடுத்த சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளார்.

இத்தொடருக்கு அம்பாறை மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முதல் வீரரான இவரை Pro Knight Chess Academy பணிப்பாளர் ஸாக்கீர் அஹமட் பயிற்றுவித்திருந்தார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

## போராடும் இங்கிலாந்து மேற்கிந்தியத்



தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டின் நேற்றைய முதல் நாள் முடிவில் இங்கிலாந்து போராடி வருகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், அன்டிகுவாவில் நேற்று முன்தினமிரவு ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்தின் அணித்தலைவர் ஜோ றூட், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

இங்கிலாந்து சார்பாக ஆரம்பத் துடுப்பாட்டவீரர் அலெக்ஸ் லீஸ் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, ஆரம்பத்திலேயே லீஸ், ஸக் குறொலி, றூட், டான் லோரன்ஸை கேமார் றோச், ஜேடன் சியல்ஸ், ஜேஸன் ஹோல்டரிடம் இழந்து தடுமாறியது.

பின்னர் பென் ஸ்டோக்ஸ், பென் ஃபோக்ஸ், கிறிஸ் வோக்ஸுடனான ஜொனி பெயார்ஸ்டோவின் இணைப்பாட்டங்கள் காரணமாக முதல் நாள் முடிவில் தமது முதலாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுகளை இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தற்போது களத்தில் பெயார்ஸ்டோ 109, வோக்ஸ் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர். முன்னதாக, ஃபோக்ஸ் 42, ஸ்டோக்ஸ் 36, லோரன்ஸ் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தனர். பந்துவீச்சில், ஹோல்டர், சியல்ஸ், றோச் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தனர்.

> **முன்னதாக, ஃபோக்ஸ் 42, ஸ்டோக்ஸ் 36, லோரன்ஸ் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தனர். பந்துவீச்சில், ஹோல்டர், சியல்ஸ், றோச் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தனர்.**


ஜேஸன் றோயின் பிரதியீடாக

## குர்பாஸைக் கைச்சாத்திட்ட குஜராத் டைட்டான்ஸ்

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) குஜராத் டைட்டான்ஸில் விளையாடவுள்ள மூன்றாவது ஆப்கானிஸ்தான் வீரராக ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் மாறியுள்ளார். இங்கிலாந்து ஆரம்பத் துடுப்பாட்டவீரர் ஜேஸன் றோய்க்கான பிரதியீடாகவே குர்பாஸை டைட்டான்ஸ் கைச்சாத்திட்டுள்ளது.

குர்பாஸை ஒரு பருவகாலத்துக்கு அவரது அடிப்படை விலையான 50 இலட்சம் இந்திய ரூபாய்களுக்கே டைட்டான்ஸ் கைச்சாத்திட்டதாக அறிய முடிகின்றது. குர்பாஸுக்கு இதுவே முதலாவது ஐ.பி.எல் ஆகும். குர்பாஸைத் தவிர, சுழற்பந்துவீச்சாளர்களான ரஷீட் கான், நூர் அஹ்மட் ஆகியோரும் டைட்டான்ஸில் காணப்படுகின்றனர்.





## பார்சிலோனா செல்லும் ஹலாண்ட்?

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பொரூசியா டொட்டமுண்டின் முன்களவீரரான எர்லிங் பிறோட் ஹலான்ட், ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவுக்குச் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பார்சிலோனா தவிர, இன்னொரு லா லிகா கழகமான றியல் மட்றிட், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியும் ஹலான்டைக் கைச்சாத்திட முயல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 10 மார்ச் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.